Needless to say, I admire you for your strength of characters, all your qualities and abilities. I'm proud to say that you are my role model.

May almighty Allah shower his blessings on you for all you have done for your people.

**Mrs. J.Adembawa, B.A.Dip in Ed, SLPS-1**
Deputy Principal,
Muslim Ladies College, Bambalapitya.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Congrats Madam on your achievement....!

Vipulananda International College, Karaitivu is more than delighted to give a message for the appreciation of Mrs Jazima Ismail, who has been selected as one of the 500 most Influential Muslims in the World in 2010. It is no easy task to be selected as one of the 500 most influential Muslims internationally and as Sri Lankans we have to acknowledge such a feat with pride and joy for her triumphant effort.

Her variety of knowledge, her sweetness towards women, her interests in social works and her expressions towards peace are the assets that consummated her excellence. Her untiring services have yielded a bumper harvest to Srilankans

Indeed, she has taken various roles and has achieved many awards by rendering many social services. She is the guiding light to entire women in Sri Lanka.

We in this short piece of writing want to thank her ladyship for extending helping hands to our International school through her MWRAF organization in Kalmunai. We fervently appeal her to heighten her services more.

We wish her well!

The Director and Staff
Vipulananda International College,
Karaitivu.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாய்ந்தமருது பெண்களின் முத்து தேசபந்து ஜெஸீமா இஸ்மாயில்

இலங்கை முஸ்லிம் பெண்கள் வரலாற்றில் சாய்ந்தமருதுக்கென தனியான ஓர் இடம் உண்டு. முதன் முதலில் பயிற்றப்பட்ட முஸ்லிம் ஆசிரியை பாத்துமுத்து ஹலால்தீனைப் பெற்ற ஊர் இது என்பதும் கல்விப்பணிப்பாளர் பதவி வரை அவர் உயர்ந்து சமூகத்துக்கு சேவை செய்தார் என்பதும் நாடறிந்த உண்மை.

இலங்கை நீதித்துறையைப் பொறுத்த வரை முதன் முதலாக நீதிபதியாகப் பதவியேற்றதும். இந்த சாய்ந்தமருதுப் பெண் ஒருவர்தான். சகோதரி ஏ.எல். மைமுனா அவர்கள் மேல் நீதிமன்ற நீதிபதியாக உயர்ந்து ஓய்வு பெற்றுள்ளார்.

இந்த ஊரின் இளஞ் சகோதரி கலாநிதி சபீனா இஸ்மாயில் அவர்கள் தென் கிழக்குப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதியாக இன்று உயர்ந்துள்ளார்

அறிவும் ஆற்றலும் புத்திசாலித் தன்மையும் நிறைந்த சாதனை படைக்கும் சாய்ந்தமருதுப் பெண்கள் வரிசையிலே சர்வதேசப் புகழ்பெற்ற ஒருவராக திருமதி ஜெஸீமா இஸ்மாயில் காணப்படுகின்றார். சர்வதேசப் புகழ்பெற்ற சக்திமிக்க ஐநூறு முஸ்லிம்களில் ஒருவராக அவர் இனம் காணப்பட்டுள்ளமை சாய்ந்தமருதுப் பெண்களின் பிரபலத்துக்கு பெரும் சான்றாகும்.

கல்வியில் மேன்மையுள்ளவர்கள் தமது பிந்திய காலங்களில் தாம் பிறந்த மண் பிரதேசம் என்பவற்றிற்கு அர்ப்பணிப்புடன் சேவை செய்ய முன்வருவது மிகவும் குறைவான ஒரு விடயமாகும். கொழும்பிலேயே வாழ்ந்து, தொழில் செய்து, எத்தனையோ எண்ணிலடங்கா செயற்பாடுகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் ஒருவர் தமது பிறந்த பிரதேசத்தையும் மக்களையும் மறக்காது தான் மட்டுமல்ல தனது கணவன் பிள்ளைகள், உதவியாளர்கள் அனைவரையும் பயன்படுத்தும் அவரது சேவை மனப்பாங்கு நிச்சயம் வரலாற்றில் இடம்பிடிக்கும்.

சுனாமியின் தாக்கத்தால் எமது பிரதேசம் அழிந்த போது கணவனை இழந்த விதவைகளையும், பெற்றோரை இழந்த பிள்ளைகளையும், உறைவிடங்களை இழந்த அகதிகளையும் அச்சுனாமி விட்டுச் சென்றபோது ஜெஸீமா தமது மனிதாபிமானப் பண்பை வெளிப்படுத்தி பிரதேசத்துக்கு உதவ முயன்றார். இன்று அவரால் பயன்பெற்ற பெண்கள் ஏராளம்! ஏராளம்!

கல்முனையில் தனது பெண்கள் ஆராய்ச்சி நிறுவனத்தின் கிளையொன்றை நிறுவி அதற்குப் பல உத்தியோகத்தர்களையும் நியமித்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியை மேற்கொண்டிருக்கும் அவர் அடிக்கடி தமது கணவர் உத்தியோகத்தர்கள் சகிதம் கல்முனைக்கு வந்து வேலைத்திட்டங்களை மதிப்பிடுவது, மேற்பார்வை செய்வது, செயற்படுத்துவது அனைத்தும் அவரது நிர்வாகத்திறனை வெளிப்படுத்தி நிற்கின்றது.

சுனாமியின் பின் அம்பாறை மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டிருந்த மெடம் ஜெஸீமா அவர்கள் அம்பறை மாவட்ட அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளனம், மாவட்டத்திலுள்ள உலமா பிரமுகர்களை கொழும்புக்கு அழைத்து மஸ்ஜித்களில் சமாதானம் தொடர்பான ஒரு செயற்றிட்டத்தையிட்டு விளக்கமளித்ததுடன் அதற்கு ஆதரவு தருமாறும் கோரினார். அதில் நான்கு செயற்றிட்டங்கள் உள்ளடங்குவதாகவும் குறிப்பிட்டார். மஸ்ஜித்களில் கடமையாற்றும் இமாம்களுக்கான குத்பா செயற்றிட்டம், இனங்களுக்கிடையே சமாதானம் சகவாழ்வு தொடர்பான செயற்றிட்டம், சமூக உள்ளார்ந்த பிரச்சினைகள் தொடர்பான செயற்றிட்டம், அரபுக் கல்லூரி பாடவிதானத்தில் சமாதானக் கல்வியை இடம்பெறச் செய்தல் தொடர்பான செயற்றிட்டம் போன்றவற்றை அவர் விளக்கினார். அந்த நான்கு செயற்றிட்டங்களுக்கும் இணைப்பாளர்களாக உலமா சபைப் பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டோம். குத்பா செயற்றிட்டத்திற்கு இணைப்பாளராக என்னை நியமித்தார்கள். இதன் பயனாக பல கருத்தரங்குகளை நாம் ஏற்பாடு செய்ததுடன் சமாதானம் தொடர்பாக குத்பா பிரசங்க நூல் ஒன்றையும் வெளியிட்டோம். 1980ல் அகில இலங்கை கதீப்மார் சம்மேளனம் நாடாளவிய ரீதியில் நடத்திய குத்பா கட்டுரைப் போட்டியொன்றில் நான் முதல் பரிசு பெற்ற அனுபவம் இவ்வேலைத்திட்டங்களுக்கு உதவியது.

2007ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சமாதானம் தொடர்பான மகாநாடொன்றில் கலந்து கொண்ட போது ஜப்பானின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் யசூசி அகாசி, மகாத்மா காந்தியின் பேத்தி செல்வி எலா காந்தி முன்னிலையில் ஜெஸீமா அவர்களின் பெயரைக் குறிப்பிட்டு அவர் தலைமையில் நடைபெறும் இச்செயற்றிட்டத்தில் சமாதானத்தின் வகிபாகத்தை விளக்கினேன். சமாதானத்தின் ஒளியைத் தேடிய அக்காலத்தில் அப்பேச்சினை சபையோர் ஆர்வமாகச் செவிமடுத்தனர்.

மேடம் ஜெஸீமா அவர்களும் நானும் சமாதானத்துக்கான சமயங்களின் இலங்கைப் பேரவையில் ஸ்தாபக உறுப்பினராக இருப்பதால் அண்மையில் தாய்லாந்தில் நடைபெற்ற மகாநாடொன்றில் கலந்து கொள்ளச் சென்றிருந்தோம். பல்கலைகழகப் பேராசிரியர் ஒருவர் அங்குள்ள பிரச்சினைகளை எமக்கு விளக்குவதற்கு நியமிக்கப்பட்டிருந்தார். அவரது விரிவுரையின்போது நடுநிலை தவறியவராக முஸ்லிம்கள் மீது குற்றச்சாட்டுக்களை கட்டவிழ்த்தார். பேராசிரியரின் பேச்சு முடிந்ததும் சில வினாக்களை நான் அவரிடம் எழுப்பி வரலாற்றைப் பேசுபவர்கள் நடுநிலை தவறக் கூடாது என்று கடுமையாக கூறியபோது மெடம் ஜெஸீமா அவர்கள் எனது கடுமையான வார்த்தைப் பிரயோகத்தை ஆச்சரியமான முறையில் சமாளித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெடம் ஜெஸீமா அவர்கள் பற்றி சமயவாதிகள் முன் ஒரு தப்பபிப்பிராயம் இருந்தது. அவர் ஒரு பெண்ணிலைவாதி என்றும் ஷரீஆ சட்டங்களை மாற்றவேண்டுமென்று கோருபவர் என்றெல்லாம் பலர் கூறியதை நான் கேட்டுள்ளேன். தலைநகரில் ஒரு குத்பா பிரசங்கத்தில் இவ்வாறு கூறுவதை நான் கேட்டுள்ளேன். ஆனால் நான் அவருடன் பழகிய காலங்களில் அவர் ஷரீஆ விதிக்குட்பட்டு வாழும் ஒரு பெண்ணாகவே நான் அவரைக் காண்கின்றேன். அவரைப்பற்றி வீண் கட்டுக் கதைகளும் கற்பனைகளும் உலாவுவதை நான் கண்டுள்ளேன். முஸ்லிம் பெண்களின் உரிமைக்காக உழைப்பதும் ஒரு சமயச் சேவையே. அதையே அவர் செய்கின்றார்.

உலகில் சிறந்த சக்திமிக்க முஸ்லிம்களில் ஒருவராக அவர் தெரிவு செய்யப்பட்டிருப்பது எமது நாட்டிற்கும் சமூகத்திற்கும் சாய்ந்தமருதுக்கும் பெருமையாகும்.

அன்னார் தீனுடைய பணியில் மேலும் மேலும் சேவையாற்ற எனது வாழ்த்துக்கள்.

மௌலவி எஸ்.எச். ஆதம்பாவா
B.A. Hons (Cey) B.A.lit (K.S.A.) M.A.
தலைவர் - அம்பாறை மாவட்ட ஜம்இய்யத்துல் உலமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வ மதங்களின் சின்னமாய் ஜொலிக்கும் அன்னை

பரந்துபட்ட சிந்தனையால் எல்லா விடயங்களிலும் நிறைவை பெற்ற ஒரு சிறந்த தாயை பாராட்ட எனக்கும் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். 2004ம் ஆண்டு சுனாமிக்கு முன்னர் நான் கிழக்கின் கல்முனை நகரிலுள்ள பௌத்த விகாரைக்கு விகாரதிபதியாக வந்த போது நாட்டில் இனமுறுகல் நிலை உச்சகட்டத்தை அடைந்திருந்தது. அக்காலத்தில் இப்பிரதேசத்தில் ஒரு பௌத்த பிக்குவாக உடையணிந்து செல்கின்ற போது எல்லோரும் என்னை வியப்பாக அவதானிப்பர்.

இக்காலத்தில் சமாதானம் தொடர்பான தேவை பலராலும் எதிர்பார்க்கப்பட்ட ஒன்றாக இருந்தது. கிழக்கில் நாம் வாழும் கல்முனை, மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் அடிக்கடி இனங்களுக்கிடையே முறுகல் நிலை தோற்றம் பெற்று அது விரும்பத்தகாத பாரிய விளைவுகளை ஏற்படுத்தியிருந்தது. இந்நிலையிலேயே அம்பாறை மாவட்டத்தில் இனங்களுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்தி சமாதானத்தை உருவாக்கிச் செயற்பட MWRAF - FAMAD எனும் அமைப்புகள் முன்வந்தன.

அம்பாறை மாவட்டத்திலுள்ள சர்வ மதங்களையும் ஒன்றிணைத்து அம்பாறை மாவட்ட சர்வ சமய சம்மேளனம் எனும் அமைப்பை உருவாக்கி இச்சமூகத்தின் நிம்மதியான சூழலுக்கு வாய்ப்பை ஏற்படுத்தி இனங்களுக்கிடையில் இருந்த சந்தேகங்களை இல்லாமல் செய்வதில் காத்திரமான ஆரம்பத்தை ஏற்படுத்தியவர் அதன் தலைவி மெடம் ஜெஸீமா இஸ்மாயில் அவர்கள். சுனாமியின் போதும் அதற்கு பிற்பட்ட காலத்திலும் இன மத வேறுபாடு பாராது தனது நிறுவனத்தின் மூலம் சகல சமூகத்தினருக்கும் பல்வேறுபட்ட உதவிகளை செய்துள்ளார்.

சமயத்தலைவர்களை கனம் பண்ணுகின்ற விடயத்தில் தனது சமயத்தை மட்டுமல்லாமல் சகல மதத்தலைவர்களையும் ஒரே சமமான பார்வையில் கௌரவப்படுத்தி, அவர்களின் தேவையறிந்து, அவர்களுடன் அளவளாவி அவர்களின் சுதந்திர சிந்தனைக்கு இடம் கொடுத்து அவர்களை உயர் நிலையில் கண்ணியம் செய்பவர். அண்மையில் கூட பங்காளதேசத்தில் நடைபெற்ற சமாதானம் தொடர்பான ஓர் அமர்விற்கு பல்வேறு மதத்தலைவர்களுடன் என்னையும் இணைத்து அதற்கான சகல ஏற்படுகளையும் செய்து தந்து அனுப்பி வைத்த மெடம் அவர்களுக்கு இச்சந்தர்ப்பத்தில் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி எனும் பெயர் கொண்டதாக அவருடைய நிறுவனம் அமைந்திருந்தாலும் அது தனியே முஸ்லிம்களுக்கு மட்டும் உதவி செய்யும் நிறுவனமாக செயற்படாமல் சகல சமயத்தவர்களையும் உள்ளடக்கி தன் பணியை முன்னெடுக்க செயற்படுத்துபவர் மெடம் ஜெஸீமா அவர்கள்.

மனிதர்களின் அத்தியாவசிய தேவைகளில் ஒன்றான நீர் பிரச்சினையை தீர்ப்பதற்காக கிறிஸ்தவ, இந்து மக்கள் வாழுகின்ற கிராமமான சொறிக்கல்முனைக்கு நீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து தான் ஒரு சமூகத்துக்கு மட்டுமல்லாமல், சகல சமயத்தவர்களுக்கும் சொந்தமானவர் என்பதை நிரூபித்துக் காட்டியர்.

தான் ஓர் அதிபராக இருந்ததற்கும், கல்வியே ஒரு மனிதனை முழுமைப்படுத்தும் என்பதற்கும் சான்றாக வறுமைப்பட்ட மாணவர்களுக்கும் கல்வியை வழங்க வேண்டுமென்பதற்காக VIP நிலையம் ஒன்றை உருவாக்கி அதனூடாக அவர்களின் கல்வித்தாகத்தை தீர்க்க செயற்படுபவர்.

மற்றவர்களை மன்னிக்கின்ற விடயத்தில் தனக்கென ஓர் புதிய வழியை எற்படுத்திக் கொண்டவர். பிரச்சினைகள் சிக்கல்களை சாதுவாக கையாண்டு அதில் திறமையான அடைவுகளை பெற வழிகாட்டுபர் மெடம் அவர்கள், தன்னிடம் தனிப்பட்ட ரீதியாகவும், நிறுவன ரீதியாகவும் உதவி கேட்டு வருபவரை தட்டிக் கழிக்காமல் அதற்கான தீர்வை பெற்றுக் கொடுப்பவராக அல்லது சாந்தமான முறையில் அதற்கான வழியை காட்டுபவராக திகழ்பவர் ஜெஸீமா இஸ்மாயில் அம்மையார் என்றால் அது மிகையாகாது.

இவ்வாறு பல்வேறுபட்ட செயற்பாடுகள் மூலம் தம் எண்ணத்தை செயற்படுத்தும் மெடம் ஜெஸீமா அம்மையார் உலகில் சிறந்த 500 பேரில் ஒருவராக தெரிவு செய்யப்பட்டிருப்பது அதிலும் இலங்கையர் ஒருவராய் அடையாளப்படுத்தப்பட்டிருப்பது அவருக்கு மட்டுமல்லாமல் அவருடைய எண்ணத்தை வழிநடாத்துகின்ற சமயத்தலைவர்களான எமக்கும் பெருமையையும் பெருமிதத்தையும் ஏற்படுத்துகின்றது.

மெடம் அவர்களுக்கு இது போன்று இன்னும் பல நல்ல கௌரவங்கள் கிடைப்பதுடன் நிறைந்த நலமுடன் இறுதிவரை சமூகப் பணியாற்றி பிரகாசிக்க என்றும் மும்மணிகளின் ஆசிகள் அவருக்கு கிடைக்க எனது பிராத்தனைகளும் வாழ்த்துக்களும்.

வண. ரண்முத்துகல சங்கரத்ன தேரர்,
ஸ்ரீ சுபதாராம மகா விகாரை,
பன்சல வீதி,
கல்முனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குணநலக்குன்று – குமரி ஜெஸீமா

பல் பரிமாண ஆளுமையுள்ள ஒரு பெண்மணியை இன்று அவர் சார்ந்த உயரிய சமூகம் பாராட்டுகிறது. "குண நலமே சான்றோர் நலம்" என்பார்கள். இங்கு குண நலம் உடையோர் என்போர் நன்மையானதெல்லாம் செய்ய முனைவது தாய் கடமை எனக்கருதப்படுவதாகும். அதனை எத்தியாகம் புரிந்தேயாயினும் செய்பவர்கள்தான் சான்றோர்கள்.

இக் குணநலத்தை நிறையவே பெற்றவர், என்றும் என் மதிப்புக்குரிய அம்மணி. ஜெஸீமா இஸ்மாயில் அவர்கள்.

'கடனென்ப நல்லவையெல்லாம் கடனறிந்து சான்றாண்மை மேற்கொள்பவர்க்கு' என்றார் உலகத்தமிழ் மறைமுனி திருவள்ளுவர். நல்லவையெல்லாம் எம் கடமை. நல்லவற்றைச் செய்வோர் சான்றோர்.

சான்றோர் வரிசையில் உயர் நிலையில் வைத்துப் பார்க்கத்தக்கவர் அம்மணி ஜெஸீமா இஸ்மாயில் அவர்கள்.

பார்வைக்கு அன்னையாக சாந்த சொரூபியாக தென்பட்டாலும் அவரது செயற்பாடுகள் யாவும் இளமையாக இருப்பதால் குமரி எனச் சொல்லத் தோன்றுகின்றது. அதனையே யான் தலைப்பில் பொறித்துள்ளேன்.

ஒரு பிரதேசத்தில் செல்வாக்குள்ள மனிதராக தேர்ந்தெடுக்கப்படுவதென்பது கஷ்டமான காரியம். ஆனால் அம்மணி ஜெஸீமா இஸ்மாயில் அவர்கள் பிரதேசத்திற்கு அப்பால் மாவட்டம், தேசியம் கடந்து அகில உலகிலே அதுவும் 500 பேருள் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது ஒரு சாமானியமான காரியமல்ல.

அவரை, சனாதன சமயமாகிய இந்து சமயிகள் சார்பாக வாழ்த்துவதில் பேருவகை அடைகின்றேன். ஏனெனில் சர்வ சமயங்களையும் உள்வாங்கி அம்பாறை மாவட்டத்தில் சர்வ சமய சம்மேளனம் (IRFAD) எனும் மாபெரும் விருட்சத்திற்கு விதை நட்டவர் அவரே.

கற்றோரும் மற்றோரும் போற்றும் சீரிய கல்வியாளர் என்ற பாணியில் அம்மணி அவர்கள் முன்னெடுத்த இச்சமாதான சமூகப்பணி நிலைத்து நிற்கக் கூடியதும் இதய சுத்தியுமானதும் என்பதை உணர்ந்தே அவ்விருட்சத்தின் கிளைகளானோம். அக்கிளையில் இருப்பதில் இறும்பூதெய்துகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிளேட்டோ உண்மை, அழகு என்பவற்றை கல்வி நோக்கங்களாய் கொண்டவர் வேந்தர் ஜெஸீமா இஸ்மாயில் கல்வியால் சமாதானப் பயணத்தைத் தொடக்கியவர்.

சுவாமி விபுலானந்தர் ஒவ்வொரு சமயமும் தனது சிறப்பியல்புகளை வெளிப்படுத்துவதோடு அச்சமயத்தைப் பிறர் பின்பற்றும் உரிமையை அனுமதிக்கும் சகிப்புத் தன்மையைக் கடைபிடிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார். அதே பாணியில் அம்மணி அவர்கள் சமயம் வேறு, கலாசாரம் வேறு இரண்டையும் கலந்து வேற்றுமை வேண்டாம் என்று கூறியவர். தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் வேந்தராகவிருந்த பெருமையுடன் பல்வேறு அமைப்புகளில் கௌரவப்பாத்திரம் ஏற்று பல்பரிமாண நடி பங்குகளை வகித்தவர் அம்மணி அவர்கள்.

ஆனால், இன்றும் பலர் கூட்டும் கூட்டங்களில், அமர்வுகளில் தனது கருத்தைத் திணிக்காமல் ஏனையோரது கருத்துக்களை பொறுமையாகக் கேட்டு உள்வாங்குவதில் அவருக்குக்கென தனிச்சிறப்புண்டு.

அம்பாறை மாவட்ட சர்வ சமய சம்மேளனம் ஆரம்பக் கூட்டமொன்றில் யான் பேசும் போது 'மதம்' என்ற சொல்லுக்கும் 'சமயம்' என்ற சொல்லுக்குமுள்ள வித்தியாசத்தையும், தன்மையையும், பொருளையும் குறிப்பிட்டேன்.

அதன் பிறகு அவர் பேசும் பல சந்தர்ப்பங்களில் இவ்விடயத்தை குறிப்பிடுவதும், 'மதம்' என்ற சொல்லைத் தவிர்த்து 'சமயம்' என்ற சொல்லைப் பயன்படுத்துவது வழமையாகிவிட்டது. உண்மையில் எத்தனை அழகு இது. இப்படி பலரது நியாயமான குரலுக்கு மதிப்பளித்து இன்று உலகிலே மதிப்பும் பெற காரணமாகவிருந்தார்.

கல்வியால் பெற்ற அழகு, பாரம்பரியமாகப் பெற்ற பண்புகள் அனைத்தும் இன்று அகிலத்தில் அன்னையை அணையா விளக்காக விளங்க வைத்திருப்பதில் எள்ளளவும் ஐயமுமில்லை. இது அவருக்குரியது.

அவர் சகல சமூகங்களையும் சமமாக மதித்து முன்னெடுக்கும் சமாதானப் பயணத்தில் நாமும் பங்கெடுப்பதில் பேருவகையடைகிறோம்.

அம்மணி, மேலும் உடல் ஆரோக்கியத்துடனும் சகல சௌபாக்கியங்களையும் பெற்று நூறாண்டு காலம் வாழ உளமார வாழ்த்துகின்றோம்.

வீ.ரி சகாதேவராஜா (M.Ed.)
(உதவிக் கல்விப் பணிப்பாளர்)
தலைவர், இந்து சமயம் - IRFAD.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயேசுக் கிறுஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்

இவ்வுலகில் எத்தனையோ பெண் சமூகசேவையாளர்கள் தோன்றி மறைந்துள்ளார்கள், இன்னும் எத்தனையோ பேர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அதில் தேசபந்து ஜெசீமா இஸ்மாயில் அவர்கள் கிழக்கிலங்கைக்கு புகழ் சேர்த்தவர். இவர் பெண் அடிமை விலங்கை உடைக்கவும் பெண்களின் விடிவுக்காகவும் கல்வி கலாசார மேம்பாட்டுக்காகவும் குரல் கொடுக்கும் சமூக சேவகியாகும்.

இவர் முஸ்லிம் பெண்களின் மேம்பாட்டுக்காக முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி மையம் என்ற நிறுவனத்தை நிறுவி அதனூடாக முஸ்லிம் பெண்களுக்கு மாத்திரம் அல்லாது ஏனைய சமூகத்தில் உள்ள பெண்களின் மேம்பாட்டுக்காகவும் குரல் கொடுத்து வருகின்றார். என் வாழ்வில் எத்தனையோ அம்மையார்களைப் பாாத்திருக்கிருக்கின்றேன் படித்திருக்கின்றேன் அவ்வம்மையார்களில் வித்தியாசமானவர் தேசபந்து ஜெசீமா இஸ்மாயில் அம்மையார் அவர்கள்.

தான் சார்ந்த சமயத்தில் பற்றுள்ளவராகவும் ஏனைய சமயத்தினரை மதிப்பவராகவும் தூரநோக்கு உடையவராகவும் யுத்த சூழலினால் பிளவுபட்டிருக்கும் சமூகங்களை ஒன்றிணைக்க அவரின் சிந்தனையில் உதித்ததுதான் அம்பாரை மாவட்ட சர்வ சமய சம்மேளனம். இச்சம்மேளனத்தை ஸ்தாபித்த பெருமைக்குரிய இவர் செய்த பணிகள் எண்ணிலடங்கா. இலைமறை காயாக வாழ்ந்து கொண்டிருக்கும் அம்மையாரின் பணி தொடர சுகபலத்தைக் கொடுக்க வேணடும் என இறையாசி வேண்டிப் பிராத்திக்கின்றேன். தொடரும் அவர் பணி தொடர வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

பாஸ்டர் ஏ. கிருபைராஜா
தலைமைப் போதகர் பரலோக வாசல் திருச்சபை,
கல்முனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# IRFAD PHOTOES







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# IRFAD PHOTOES













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தோன்றிற் புகழொடு தோன்றுதல்

-ஏ.பீர் முகம்மது-

கிழக்கிலங்கையில் கீர்த்தியுடன் வாழ்ந்த
காரியப்பர் பரம்பரை
ஆற்றிய பணிகள் அளவிடற்கரியன

அவர்களிற் சிலபேர் அரசியல் ஊடாய்
மக்கள் சேவையில் மகுடம் சுமந்தனர்.
கல்வியில் உயர்ந்து களப்பணி புரிந்தனர்.
நிர்மாணத்துறையிலும் நீர்ப்பாசனத்திலும்
நீண்ட காலத் திட்டங்கள் தீட்டி
நிலையான வேலைகள் செய்து முடித்தனர்.
மக்கள் இதனால் மகிழ்ச்சி அடைந்தனர்.
ஊரும் நாடும் உயர்வைப் பெற்றன.

இவர்களிற் சிலபேர் எங்கள் மண்ணிலும்
பிறந்து வளர்ந்து பெருமை சேர்த்தனர்.
இதன் வழிப்பிறந்த ஜெஸீமா இஸ்மாயில்
இனிய மனத்தினர். இந்த வயதிலும்
மனந்தளராது மக்கள் சேவை
புரியும் மனத்தினர்.

தேசபந்தெனும் தேசிய பட்டம்
முதலில் பெற்ற முஸ்லிம் பெண்மணி.
மருத்துவ பீடத் தலைவர் வரிசையில்
முதலில் வந்த முஸ்லிம் என்ற
பெருமை பெற்ற பேராசிரியர்
மஹ்றூப் இஸ்மாயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிப்பிற்குரிய மனிதர்
அவரை கணவராய் அடையும் பாக்கியம் பெற்றவர்.

**இன்று**
**உலகில் வாழும் முஸ்லிம்களிலே**
**செல்வாக்குள்ள மனிதர்களான**
**500 பேரில் அவரும் ஒருவர்.**
இதனால்
பெருமை பெற்றது அவரா? நாங்களா?
பிறந்த மண்ணும் இப்பிரதேசமும்
எங்கள் நாடும் பெருமை பெற்றது.

இனங்களுக்கிடையே ஒற்றுமை கண்டதால்
பெண்களின் அவலம் போக்கத் துணிந்ததால்
கல்வியில் உயர்ந்து பட்டங்கள் பெற்றதால்
பெருமைக்குரிய பெண்மணி ஆனார்.
மதங்களுக்கப்பால் இனங்களுக்கப்பால்
மனித நேயப்பணிகள் புரிந்ததால்
பெண்களின் உரிமை பேசத் துணிந்ததால்
உலகம் அவரின் விலாசம் தெரிந்து
விருது வழங்கி வியப்பில் ஆழ்ந்தது.
அதனால்
இந்து கிறிஸ்தவம் இஸ்லாம் பௌத்தம்
எல்லா மக்களும் ஒன்றாய் சேர்ந்து
எல்லா ஊர்களும் ஒருமனதாகி
வாழ்த்தி மகிழ்ந்தோம்
பெருமைக்குரிய பெண்மணி இவரை
வாழ்த்தி மகிழ்ந்தோம் வாழ்க பல்லாண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகின் செல்வாக்குமிக்க ஒரு பெண்மணியின்

## குடும்பப் பின்புலமும் சில குறிப்புக்களும்.

ஜோர்தான் தலைநகரமான அமமான் நகரில் இயங்கும் 'றோயல் இஸ்லாமிக் ஸ்றேஜிக் ஸ்ரடி சென்டர்' என்னும் நிறுவனத்தினால் உலகில் அதிகம் செல்வாக்குமிக்க 500 முஸ்லிம்களில் ஒருவராகத் தெரிவுசெய்யப்பட்டவரான தேசபந்த் ஜெஸீமா இஸ்மாயில் அவர்கள், நமது மண்ணிலிருந்து சர்வதேச விருது ஒன்றினைப் பெறும் முதற்பெண்மணியாவார்.

முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி. (MWRAF) என்ற அரச சார்பற்ற இயக்கத்தின் ஸ்தாபகரும் பாகுபாட்டை ஒழித்து மனித உரிமைகள் பேணப்படுவதை கண்காணிப்பதற்கான ஜனாதிபதி ஆணைக்குழு. கொழும்பு பல்கலைக்கழக மனித உரிமைகள் நிலைய நிர்வாகக் குழு போன்றவற்றில் அங்கம் வகிப்பவருமான திருமதி ஜெஸீமா இஸ்மாயில் அவர்கள், உலகளாவிய பெண்ணியல் இயக்கங்கள் பலவற்றிலும் அங்கத்துவம் வகிப்பவர். உலகின் பற்பல நாடுகளிலும், சுற்றுப் பிரயாணம் செய்து பற்பல கருத்தரங்குகளில் உரையாற்றி நமது மண்ணுக்கும் குறிப்பாக நமது முஸ்லிம் பெண்களுக்கும் ஒரு சிறந்த அறிவார்ந்த முன்னோடியாகத் திகழ்கின்றார்.

தேசபந்த் ஜெஸீமா இஸ்மாயில் அவர்கள், கொழும்பு சென்பிறிஜட் கல்லூரியில் ஆரம்பக் கல்வியைப் பெற்றவர். இலங்கைப் பல்கலைக்கழகத்தில் கலைமானிப்பட்டத்தையும். 'மாக்கிள்' பல்கலைக்கழகத்தில் முதுகலைமானிப் பட்டத்தையும். சிட்னி பல்கலைக்கழகத்தில் கல்வி டிப்ளோமாப் பட்டத்தையும் பெற்றவர். 1956 இலிருந்து 1974 வரை கொழும்பு தேவிபாளிகா வித்தியாலயத்தில் பட்டதாரி உதவி ஆசிரியராகவும். அதன் பின் பம்பலப்பிட்டி முஸ்லிம் மகளிர் கல்லூரியில் 13 வருடகாலம் அதிபராகவும் கடமை பரிந்தவர். தென்கிழக்கின் முதல் முஸ்லிம் பெண் பட்டதாரி. தென்கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு வேந்தராக நியமிக்கப்பெற்றவர். தவிரவும், முழு இலங்கையிலும் 'தேசபந்த்' கௌரவம் பெற்ற முதல் முஸ்லிம் பெண்மணி. என்றெல்லாம் பல்வேறுபட்ட ஆற்றல்கள் வாய்ந்தவர்.

மேற்படி சாதனைகளுக்கெல்லாம் அன்னாரது குடும்பப் பின்புலமும் ஒரு முக்கிய காரணமாகும். தந்தை வழியிலும் தாய் வழியிலும் அவர் பிரபல்யம் வாய்ந்த இரு பெரும் குடும்பங்களின் சங்கமத்தில் விளைந்தவராவார். தந்தை வழி அக்கரைப்பற்றின் செல்வாக்குமிக்க பக்கீர்தம்பி பொலிசானை அவர்களின் மகனான முகம்மதுதம்பி மகா வட்டவிதானையாரின் புத்திரரான சஹித் அகமட் துரை (எந்திரி) அவர்களே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி ஜெஸீமா இஸ்மாயில் அவர்களின் தந்தையார் ஆவார். இக் குடும்பத்தில்தான் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான **சுவீட் மஜீத்** தற்போதைய அமைச்சர் கௌரவ **ஏஎல்.எம். அதாவுல்லாஹ் பா.உ.** போன்ற மக்கள் தலைவர்கள் உதயமாகினர்.

தாய் வழியில் திருமதி ஜெஸீமா இஸ்மாயில் அவர்களின் தாயாரான திருமதி **பாளின் காரியப்பர்** அவர்கள் இரு பெரும் காரியப்பர் குடும்பத்தைச் சேர்ந்தவராவார். அன்னார் கொட்டபோவே அகமதுலெவ்வைக் காரியப்பரின் (1850) புத்திரரான முகமது இபுறாகிம் காரியப்பரினதம் மட்டக்களப்புக் காரியப்பரான தம்பிநயிந்தைக் காரியப்பரின் (1917) மகனான முகம்மது காசிம் பொலிசானை அவர்களின் மகளான லைலத்துல்கத்ரிய்யாவினதும் புத்திரியாவார். இக்குடும்பத்திலேயே முன்னாள் அமைச்சரும் தூரநோக்குச் சிந்தனையாளரும் தென்கிழக்கின் தேசபிதாவுமான **'கேற்முதலியார்' M.S. காரியப்பர்.** கல்முனைத் தொகுதி முன்னாள் பா.உ.**M.C.அகமது** ஆகிய வரலாற்று நாயகர்கள் உருவாயினர்.

இந்த வகையில் திருமதி ஜெஸீமா இஸ்மாயில் அவர்கள் மட்டக்களப்புக் காரியப்பர் வழியிலும் கொட்டபோவே காரியப்பரின் வழியிலுமாக இரு பக்க காரியப்பர்களின் வழித் தோன்றலாகத் திகழ்கிறார். திருமதி ஜெஸீமா இஸ்மாயில் அவர்களுக்கு இயல்பாகவே அமைந்த அறிவும் செல்வாக்கும் மிக்க குடும்பப் பின்புலமும் அவர் தன் முதாதையரிடமிருந்து கற்றுக் கொண்ட தலைமைத்துவம் மற்றும் தனக்குள் அவர் சுயமாக வளர்த்துக் கொண்ட ஆற்றலுமே இவரை இன்று உலகின் செல்வாக்குமிக்க 500 பேரில் ஒருவராக சிறப்படைய வைத்ததெனலாம்.

திருமதி ஜெஸீமா இஸ்மாயில் அவர்கள் தனது அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றபின், முஸ்லிம் பெண்களின் வாழ்வியல் முன்னேற்றம் கருதி, ஸ்தாபித்த முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி. (MWRAF) தென்கிழக்கின் பற்பல ஊர்களிலும் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திச் சேவை புரிந்து வருகிறது. இவ்வமைப்பின் மூலம் நூற்றுக்கணக்கான பெண்கள் சுய வேலைவாய்ப்புகளையும், வாழ்வாதார உதவிகளையும் பெற்று வருகின்றனர்.

திருமதி ஜெஸீமா இஸ்மாயில் அவர்களின் தகுதி ஆற்றல் மொழித்தேர்ச்சி. ஆளுமைப்பண்பு ஆகியவற்றைக் கருத்திற் கொண்டே முன்னாள் ஜனாதிபதி திருமதி சந்திரிக்கா பண்டாரநபயக்க அவர்கள் திருமதி ஜெஸீமா இஸ்மாயில் அவர்களின் பெயரை 2000ம் ஆண்டு பொதுத்தேர்தின் போது தேசிய நியமனப் பட்டியலில் இடம்பெறச்செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணியல் முன்னேற்றச் சிந்தனைகள் கொண்ட இம்மாது, உலகளாவிய பெண்ணியல் இயக்கங்கள் பலவற்றில் அங்கத்துவம் வகிப்பதுவும் உலகின் பற்பல நாடுகளிலும், சுறுசுறுப்புடன் சுற்றுப் பிரயாணம் செய்து பற்பல கருத்தரங்குகளில் உரையாற்றி வருவதும் இம்மண்ணின் புத்திரி என்ற வகையில் நம் அனைவரும் பெருமை பாராட்டக் கூடிய ஒரு விடயமாகும்.

'........பெண் சமத்துவம் பற்றிய மூலாதாரக் கரு இஸ்லாத்தில் மட்டுமே உண்டு.. அதனடிப்படையில் முஸ்லிம் பெண்கள் இயக்கமயப்பட்டு முன்னேறுதல் வேண்டும்......" என்று வலியுறுத்தி, அதற்காகவே, இன்றும் ஓயாது இயங்கிக் கொண்டிருக்கும் உறுதிமிக்க பெண்மணியான திருமதி ஜெஸீமா இஸ்மாயில் அவர்களின் பொதுச் சமுகநலச் சேவைகளைப் பாராட்டி அவரது தாய்மண்ணான சாய்ந்தமருதிலும் அன்னாரை வாழும்போதே வாழ்த்திக் கௌரவிக்கும் நிமித்தம் சாய்ந்தமருது சிரேஷ்ட பிரஜைகள் ஒன்றியம், அம்பாறை மாவட்ட சர்வசமய சம்மேளனம், கல்முனை மஹ்முத் மகளிர் கல்லூரி, முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியின் கிழக்கு மாகாண காரியாலயம். ஆகிய அமைப்புக்கள் இணைந்து எடுக்கும் இவ்விழாவிற்கு எனது நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திருமதி ஜெஸீமா இஸ்மாயில் அவர்கள் மேலும் பல்லாண்டு காலம் வாழ்ந்து இச்சமுகத்திற்கு இன்னும் பற்பல தொண்டுகள் புரிய அன்னாருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் நல்ல தேகாரோக்கியமும் நீண்ட ஆயுளும் கிடைக்கப்பெற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். ஆமின்.

**அல்ஹாஜ். எம்.ஸீ.ஏ ஹமீட்**
ஓ.பெ. ஸ்தாபக அதிபர். கல்முனை மஹ்முத் மகளிர் கல்லூரி
முன்னாள் பிரதம நம்பிக்கையாளர், சாய்ந்தமருது ஜும்மா மஸ்ஜித்
தலைவர், சாய்ந்தமருது சிரேஷ்ட பிரஜைகள் சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரு மனம் கொண்ட பெருந்தகை

பிறருக்குதவுவதென்பது மனிதனது பிறப்பிலேயே தோற்றமெடுக்கின்றது. அதிலும் பிறருக்குதவுவதே தம் கடமை எனக் கொள்ளும் சிலரும் உள்ளனர். அவ்வாறான குணம் படைத்தவர்களில் திருமதி ஜெஸீமா இஸ்மாயிலும் ஒருவர். இவர் இளமைக் காலம் முதலே தொண்டாற்றுவதில் மிக்க ஆர்வம் கொண்டவராயிருந்துள்ளார். அதிலும் பெண்கள் சமூகத்தில் மதிக்கப்பட வேண்டும், அவர்களது நிலை உயர்த்தப்பட வேண்டும். பெண்கள்தான் சமூக அமைப்பு முறையின் முக்கிய பாத்திரம் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கையுள்ளவர். தனது உத்தியோகங்களின் மூலம் செய்த சேவைகளுக்கப்பால் அவர் அரச உத்தியோகங்களைத் துறந்த பின்தான் மிகக் கூடியளவு மக்களுக்கு சேவையாற்றி வருகின்றார் என்று துணிந்து கூறலாம்.நாட்டின் மிக உயர்ந்த மட்டங்களில் மதிக்கப்படுகின்ற ஒருவராயிருந்து கொண்டும் அடிமட்ட மக்களின் வறுமை ஒழிப்புக்கும் அவர்களது வாழ்க்கை மேம்பாட்டுக்குமாக மிகக் கூடிய பங்களிப்புச் செய்ய வேண்டும் என்பதற்காக முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சிச் செயல் முன்னணி MWRAF என்ற ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனத்தைத் தோற்றுவித்து அந்த நிறுவனத்தின் மூலம் முஸ்லிம் பெண்கள் மட்டுமன்றி முழு சமூகமுமே நன்மை பெற வேண்டும் என்பதற்காக அயராது உழைத்து வருகின்றார். வறுமை ஒழிப்பு, குடிநீர் வழங்கல், சுகாதார மேம்பாடு, கல்வி அபிவிருத்தி, கைத்தொழிற் பயிற்சி போன்ற முயற்சிகளில் இந் நிறுவனத்தினூடாகப் பல கோடி ருபாய்களைப் பெற்றும் செலவு செய்து வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் இவர் சமூகங்களும் சமயங்களும் எதிரிகளாகவன்றி இணைந்து ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து ஏற்றுக் கொண்டு ஒற்றுமையாகவும் சௌஜன்யமாகவும் வாழ வேண்டும் என்பதில் மிக்க ஈடுபாடு கொண்டவராயிருந்து வருகின்றார். அதற்காகத் தனது முயற்சியை முடியுமானவரை செய்து வருகின்றார்.

தன்னார்வத் தொண்டு நிறுவனம் (NGO) அரச சார்பற்ற நிறுவனமெனவும் அழைக்கப்படும் . இந் நிறுவனங்கள் இன்று மக்கள் மத்தியில் ஒரு சேவை நிறுவனமாகப் பார்க்கப்படுவதில்லை. ஏனெனில் அவ்வாறான நிறுவனங்களை இயக்கும் பலர் செய்யும் மாறுபட்ட நடவடிக்கைகளாலாகும். ஆனால் தேசபந்து ஜெஸீமா இஸ்மாயில் தனது MWRAF நிறுவனத்தை அவ்வாறன்றி மக்கள் சேவைக்காகவே பயன்படுத்தி வருகின்றார். நான் மேலே கூறியவாறு மக்களின் அடிமட்ட பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் அல்லது அதற்காக உதவுவதில் அந்நிறுவனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகக் கூர்மையாகச் செயல்பட்டு வருகிறது. அந்நிறுவனம் நிதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு இவரது செல்வாக்கும் பங்களிப்பும் அயராத முயற்சியும் மிகவும் துணையாயமைகிறது.

முஸ்லிம் பெண்கள் மட்டுமன்றி முஸ்லிம் பள்ளிவாசல்களும் அதன் இமாம்களும் சமூக அபிவிருத்தியில் முக்கிய பங்கு வகிக்க வேண்டும் என்ற அடிப்படையில் இமாம்களைச் சமூகத் தலைமைப் பொறுப்பை ஏற்கக் கூடியவர்களாக மாற்றுவதற்கான பயிற்சிகளை வழங்க வேண்டும் என்ற ஒரு சிந்தனையின் வெளிப்பாடாய் 2006ம் ஆண்டு அதற்கென ஒரு பயிற்சித் திட்டத்தை ஏற்படுத்தி எமது கிழக்கு மாகாண பள்ளிவாசல்களின் இமாம்களுக்குப் பயிற்சியளிப்பதை அம்பாரை மாவட்ட பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் மூலம் நிறைவேற்றினார். இதனால் எமது இமாம்கள் பலர் பயன்பெற்றனர். சமூகத்தின் அனைத்து விடயங்களிலும் இமாம்கள் முன்னோடியாயிருந்து தலைமை தாங்க வேண்டும் என்ற நன்நோக்கத்தோடு செய்யப்பட்ட இப்பயிற்சி பெரிதும் உதவியது.

இன்று அரசியல் பிரவேசத்தின் மூலம் மட்டுமே பொது சேவை செய்ய முடியும் என்ற ஒரு எண்ணப்பாடு வளர்க்கப்பட்டுள்ளது. அவ்வாறன்றித் தனி ஒரு மனிதன் அதிலும் ஒரு பெண் பொது சேவையினை எந்தளவு விரிவுபட்டதாக செய்ய முடியும் என்பதற்கு தேசபந்து ஜெஸீமா இஸ்மாயில் சிறந்ததோர் எடுத்துக்காட்டாகும். இவரது பணிகளுக்கு கணவன் பேராசிரியர் ம.்றூப் இஸ்மாயில் அவர்களும் குடும்பத்தினரும் கூடவே இருந்து துணைபுரிவதும் ஒரு சிறப்பம்சமாகும்.

இன்னும் பல்லாண்டு காலம் வாழ்ந்து சேவையாற்ற இறைவனைப் பிரார்த்தித்து என் இனிய வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஐ.எம். இப்றாகீம்,
முன்னாள் செயலாளர் -
அம்பாறை மாவட்ட அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளனம்,
சம்மாந்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேசப் புகழ் பெற்ற சமூக சேவையாளர்

சமீபத்தில் வெளியான 'சாய்ந்தமருது வரலாறு' எனும் நூல் இவ்வூருக்குப் புகழ் சேர்த்த பெண்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. அவர்களுள் தலையாயவர் ஜெஸிமா இஸ்மாயில் ஆவார்.

அரை நூற்றாண்டுக்கு முன்னரான காலப்பகுதியில் எழில் கொஞ்சும் கிராமமாக சாய்ந்தமருது திகழ்ந்தது. சனத்தொகை குறைந்த அக்காலத்தில், உச்சிவெயில் கூட நிலத்தில் விழாத அளவிற்கு ஊரெல்லாம் மரங்கள் நிறைந்து நின்றன. மேற்குத் திசையில் ஊரோடு ஒட்டியதாய் தாமரைக்குளம்; அதற்கப்பால் கண்ணுக்கெட்டிய தூரம் வரை பசுமையான நெல் வயல்கள். கிழக்கிலே சதா ஆர்ப்பரிக்கும் வங்காள விரிகுடாக் கடலை அண்டிய பரந்த கடற்கரையில் நூற்றுக்கு மேற்பட்ட மீன்பிடித்தோணிகள் காணப்படும். இத்தகைய செழிப்பான ஊர் மக்களின் வாழ்க்கை மிக அமைதியானதும் நிம்மதியானதுமாகும்.

இத்தகைய சூழலிலே பிறந்து, வளர்ந்த ஜெஸிமா அவரது தந்தையாரின் உத்தியோக இடமாற்றத்தின் விளைவாகக் கொழும்புவாசியானார். அவரது தந்தையான சஹீத் அஹ்மத் அக்கரைப்பற்றைச் சேர்ந்தவர். முகம்மதுத் தம்பி வட்டவிதானையாரின் மகன். குடிமரைக்கார், விதானையார், உடையார், தோம்புதோர், வட்டவிதானை போன்றோர் அக்காலத்தில் கிராமத்தின் முக்கியஸ்தர்களாவர். நீர்ப்பாசன உதவி அலுவலராகத் தமது உத்தியோக வாழ்க்கையை ஆரம்பித்த சஹீத் அஹ்மத், சாய்ந்தமருதுவைச் சேர்ந்த டாக்டர் முஹம்மது இப்றாஹீம் காரியப்பரின் மகளான பார்ளின் என்பவரை விவாகம் செய்தார். அவர்களின் மூன்று பிள்ளைகள் ஸாஹிறா (நேசம்), லத்தீபா (தங்கம்) மற்றும் ஜெஸிமா (பேபி) ஆகியோராவர்.

உத்தியோகமாகி, விவாகமும் செய்து, பிள்ளைகளும் பிறந்த பின்னர்தான், சஹீத் அஹ்மத் தனது உயர் கல்வியைத் தொடர்ந்தார். B.Sc, AMICE, MICE, AMIWE, MLWE ஆகிய பட்டங்களைப் பெற்றதோடு, அக்காலத்தில் அவர் பெறக் கூடிய மிகவுயர்ந்த பதவியான நீர்ப்பாசனத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் பதவி வரை உயர்ந்தார். தனது பெண் பிள்ளைகளையும் உயர் கல்வி பெற வைத்தார்.

தந்தையின் திறமைகளை மகள் ஜெஸிமாவில் அபரிமிதமாகக் காண்கிறோம். அதற்கு மேலாக சமூக சேவையிலான நாட்டத்தையும், பிறந்த ஊர்ப்பற்றையும் அவரிடம் காண்கின்றோம். கல்முனை கார்மேல் கொன்வென்டில் ஆரம்பக் கல்வியைப் பெற்ற அவர், கொழும்பு சென்ற் பிரிஜ்ட்ஸ் கொன்வன்டில் கனிஷ்ட, சிரேஷ்ட நிலைக் கல்வியைப் பெற்றதோடு, இரண்டாம் மகாயுத்த காலத்தில் மட்டக்களப்பு வின்சென்ட் மகளிர் கல்லூரியிலும் சிறிது காலம் படித்துள்ளார். பேராதனைப் பல்கலைக்கழக பி.ஏ. பட்டதாரியான இவர், தமது எம்.ஏ. பட்டத்தைக் கனடாவிலும், கல்வி டிப்ளோமாவை அவுஸ்திரேலியாவிலும் பெற்றவராவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைப்பல்கலைக் கழகத்தில் அவர் பீ.ஏ. பட்டம் பெற்ற வேளை அதுவொரு பெருஞ்சாதனையாகக் கருதப்பட்டது. ஏனெனில் அப்போது பல்கலைக் கழகப் பிரவேசம் பெறுவோர் மிகச் சொற்ப தொகையினராவர். அவ்வாறு அனுமதி பெறுவோரின் பெயர் பட்டியலானது ஆங்கிலப் பத்திரிகையில் ஒரு சிறு பந்தியாக வெளிவரும். அதிலும் முஸ்லிம்களின் தொகை ஐந்தோ பத்தாகவோ இருக்கும். பெண்களின் தொகை மிக அரிது.

ஆசிரியத் தொழிலை மிக விருப்புடன் மேற்கொண்டு கொழும்பு தேவி பாலிகா வித்தியாலயத்தில் கடமையாற்றிய வேளையில் முகிழ்ந்த கல்விச் சிந்தனைகளைச் செயற்படுத்தும் வாய்ப்பு கொழும்பு முஸ்லிம் மகளிர் கல்லூரியின் அதிபர் பொறுப்பையேற்றதும் கிடைத்தது. அக்கல்லூரியின் பொற்காலம் இவர் அதிபராயிருந்த காலமேயாகும்.

கல்லூரியுடன் தன்னை மட்டுப்படுத்திக் கொள்ளாது, தேச சேவையிலும், சமுதாய முன்னேற்றத்திலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட காரணத்தினால், நாட்டின் நலனும், நாட்டு மக்களின் வாழ்வு மேம்பாடும், விசேடமாகத் தான் பிறந்து வளர்ந்த பிரதேசத்து மக்களின் வள மேம்பாடுமே இன்று அவரின் முழுவாழ்க்கையாக மாறிவிட்டது.

இலங்கை அரசாங்கத்தின் உயர் கௌரவ விருதான 'தேசபந்து' வைப் பெற்ற முதலாவது முஸ்லிம் பெண்மணி என்பதோடு: தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் வேந்தராக நியமிக்கப்பட்டதன் மூலம் 'வேந்தர்' எனும் பதவிக்கு நியமிக்கப்பட்ட முதல் முஸ்லிம் பெண்மணி எனும் புகழையும் பெறுகிறார். தனது சேவைகளின் பலனாகத் தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் கணிப்பைப் பெற்ற ஒருவராகத் திகழ்கின்ற காரணத்தினால், அவர் பிறந்து வளர்ந்த ஊரும் புகழடைகின்றது.

இத்தனைக்கும் பக்கத்துணையான அவரது கணவரான பேராசிரியர் டாக்டர் மஹ்றூப் இஸ்மாயிலைப் பற்றிக் குறிப்பிடாமல் இக்குறிப்பு நிறைவு பெறாது. இலங்கைப் பாராளுமன்றத்தின் முதலாவது படைக்கலச் சேவிதரான எம். இஸ்மாயிலின் ஐந்து ஆண் மக்களுள் ஒருவரான மஹ்றூப் இஸ்மாயில் கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதியாயிருந்து இன்று ஓய்வு பெற்றுள்ளார். இருப்பினும் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி மூலம் தமது துணைவியார் ஆற்றிவரும் சேவைகளில் இவரும் பூரண பங்காற்றுவது வியந்து போற்றுதற்குரியதே.

அல்-ஹாஜ். எஸ்.எச்.எம். ஜெமீல் M.A.
முன்னாள் முஸ்லிம் கலாசார அமைச்சு செயலாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசத்தின் சொத்து தேசபந்து ஜெஸீமா இஸ்மாயில்

நிறையுடைய வாழ்வளித்து நெடு நிலத்தைக்காக்கும் மறையளித்த இறைவனுக்கே மாபெரிய புகழனைத்தும். அல்ஹம்துலில்லாஹ்.

கிழக்கிலங்கை முஸ்லிம்களின் அரசியல் வரலாற்றோடு இரண்டறக்கலந்த காரியப்பர் பரம்பரையில் வைத்தியக்கலாநிதியின் மகள் பர்வின் காரியப்பருக்கும், செல்லமாக இப்பிரதேசத்தில் அழைக்கப்படும் ஷஹீத் என்ஜினியர் துரைக்கும் அன்பு மகளாக சாய்ந்தமருதூரில் பிறந்த ஜெஸீமா இஸ்மாயில் அவர்கள், கொழும்பு மருத்துவபீடத்தில் முதல் முஸ்லிம் பிடாதிபதியாக வீற்றிருந்த மஹ்றூப் இஸ்மாயில் அவர்களைக் கரம்பிடித்து இல்லற வாழ்வில் இணைந்து கொண்டவர்கள். இல்லற வாழ்வோடு மட்டும் நின்றுவிடாது கிழக்கிலங்கையின் புகழைத் தேசமெங்கும் இலங்கச்செய்து வாழ்ந்து கொண்டிருக்கும் வரலாற்றுப்புகழையும் தேடிக்கொண்டவர்கள் அவர்கள் இன்று இலங்கையின் விலைமதிக்கமுடியாத தேசத்தின் சொத்து, தேசபந்து அதற்குக்கிடைத்த முத்திரை.

பாடசாலைக்கல்வியைக் கல்முனை கார்மேல் பாத்திமாவில் ஆரம்பித்து கொழும்பிலும், மட்டக்களப்பு வின்சன் மகளிர் கல்லூரியிலும் நிறைவுசெய்து, பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டக்கல்வியைப் பூர்த்திசெய்து, 1957 ல் கொழும்பு தேவி பாலிகா வித்தியாலயத்தில் ஆசிரியப்பணியை ஆரம்பித்து, இன, மதபேதமின்றித் தனது சமூகப்பணியைத் தொடர்ந்தார். 1944 - 1966 களில் கனடா பல்கலைக்கழகத்தில் முதுமாணிப்பட்டத்தையும், 1971 - 1972 களில் அவுஸ்திரேலிய பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் படிப்பையும் கற்றுத்தேறி, பாரதிகண்ட புதுமைப் பெண்ணாகப் புறப்பட்டு, இலங்கை முஸ்லிம்களின் முதற்பெண்மணியாக, 1975 ல் இருந்து 1988 வரை கொழும்பு முஸ்லிம் மகளிர் கல்லூரியில் அதிபராக சேவையாற்றத் தொடங்கினார். இக்காலம் இவர்களது சமூக சேவைக்காலத்தின் பொற்காலம் எனலாம். ஒரு தசாப்தத்திற்கு மேல் கிழக்கிலங்கைப் பெண்மணி ஒருவர் கொழும்பு மாநகரத்தில் அதிபராக விளங்கி, அரும்பணியாற்றியதைக் காணும்போது கிழக்கிலங்கையில் பிறந்த நாம் பெருமைப்படாமல் இருக்கமுடியாது.

அதுமாத்திரமா ''ஜெஸீமா இஸ்மாயில் அதிபரைப்போல் அதிபர் பதவியை அலங்கரிக்கும் ஒருவர் இனித்தான் பிறக்கவேண்டும்'' என்று பெற்றார் பெருமைப்படும் அளவுக்கு அன்று அவர்கள் ஆற்றிய சேவை இருக்கின்றது. அவரது சேவையின் இருப்பை என்னவென்று அழைப்பது. அவரது சேவை, அதாவது கொழும்பு முஸ்லிம் மகளிர் கல்லூரியில் ஆற்றிய மகத்தான சேவை இலங்கை வாழ் முஸ்லிம் சமூகத்துக்கு முழுமையாகக்கிடைத்த சேவையெனின் மிகையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் அவர் சேவை முற்றுப்பெறவில்லை. தேசிய ரீதியிலும், உலகளாவிய ரீதியிலும் பல்வேறு அமைப்புக்களின் தலைமைப்பதவியும் உறுப்பினர் பதவியும் அவர்களைத் தேடிவந்தது. சட்டம், கல்வி, மனித உரிமை, பெண் உரிமை என்று சகல துறைகளிலும் இவர்களது தடம் பதிக்கப்பட்டிருக்கிறது. அறிக்கைகளாகவும், ஆலோசனைகளாகவும் மேற்படி அமைப்புக்களுக்கு வழங்கி, கிழக்கிலங்கைக்கு மாத்திரமல்லாது எமது தாய் நாட்டிற்கும், குறிப்பாக உலகளாவிய பெண்களுக்கும், அதிலும் முஸ்லிம் பெண்களுக்கும் சேவையை நல்கியுள்ளார்கள். ''சார்க்'' நாடுகளின் (SAARC) பல்கலைக்கழக பெண்களுக்கு ஆரம்பகாலத் தலைவியாக இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதுபோன்று பல அமைப்புகளில் அங்கம் வகித்து தன் பங்களிப்பை வழங்கியுள்ளார்கள். இவையாவற்றிற்கும் மேலாக (MWRAF) முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயலணியின் தலைவியாக இருந்து சமூகத்துக்கு அவர் ஆற்றிய, ஆற்றும் பணிகள் ஏனைய சமூகங்களும் அவரைப்போற்றுகின்ற பிரம்மிக்கத்தக்க விடயமாக உள்ளன.

இவர்கள் கல்வித்துறையில் காட்டிய அக்கறையின் காரணமாக இலங்கையரசும் இவர்களை கௌரவித்துள்ளது. தென்கிழக்குப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டபோது அதன் (Chanceller) வேந்தராக நாம் கண்டோம். ஜெஸீமா இஸ்மாயில் அவர்களின் சேவையின் கனதியைக்கண்ட எங்கள் தலைவர் மர்ஹூம் அமைச்சர் அஸ்ரஃப் அவர்கள் அப்பதவிக்குச் சிபாரிசு செய்திருந்தார். அவருக்கும் நன்றியை உரித்தாக்கவேண்டும். திறந்த பல்கலைக்கழகம், கொழும்பு பல்கலைக்கழகம், தேசிய கல்வி நிறுவகம், இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் மாத்திரமல்லாது கல்வியில் மாற்றத்தை ஏற்படுத்த அமைக்கப்பட்ட சகல அமைப்புக்களிலும் தலைவராக அல்லது உறுப்பினராக அமர்ந்து சேவை செய்துள்ளமையைக்காணும் போது முஸ்லிம் சமூகமே புளகாங்கிதம் அடைகின்றது. கல்வி, சட்டம், ஊடகம் என்று சகல துறைகளிலும் உயர்மட்ட முடிவுகளையும், தீர்மானங்களையும், ஆலோசனைகளையும் எடுப்பதற்குத் தனது பங்களிப்பை நல்கியுள்ளார் என்பதற்கு சரித்திரங்கள் சான்று பகர்கின்றன.

இவ்வாறு எத்துறையிலும் தன் திறமையைக் காண்பித்த முஸ்லிம் வீரப்பெண்மணி, சர்வதேச ரீதியாக பிரச்சினைகளை அணுகித்தீர்ப்பவராக, சமூதாயத்தில் அவ்வப்போது எழும் அனர்த்தங்களுக்கு ஏற்ற நிவாரண உதவிகளைப் பெற்றுக் கொடுப்பவராக கல்விமானாக, கற்றபெண்ணாக, ஒரு தாயாக, ஒரு மனைவியாக என்று பல்வேறு பாத்திரங்களுடாக வழங்கிய பங்களிப்பைப் பார்க்கும் போது இவரது செயல்கள், பெண்களுக்கு ஒரு முன்மாதிரியைத் தருகின்றது. அத்துடன் பெண்களுக்குரிய உரிமைகளை இஸ்லாமிய கலாசார வரையறைக்குள் நின்று எவ்வாறு ஒழுகலாம் என்பதற்கும் எடுத்துக்காட்டாக விளங்குவதும் பெருமையாக இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெஸீமா இஸ்மாயில் அவர்களின் வாழ்க்கை வரலாற்றைப் புரட்டிப்பார்க்கும் போது அவர்களின் தாய் மாமனார் கேட்முதலியார் எம்.எஸ். காரியப்பர் புதுமைப் பெண்ணாக அரசியலில் பிரவேசிக்க வேண்டுமென விரும்பியது தெரியவருகிறது. முஸ்லிம் பெண்களின் அரசியல் பிரவேசத்திற்கும் இவர்களின் முன்மாதிரிகள், ஆலோசனை வடிவிலும், செயல் வடிவிலும் உள்ளன என்பதையும் தொட்டுக்காட்டாமல் இருக்க முடியாது.

இவர்களது சேவைகளுக்குச் சான்றாகத்தான் தேச, சர்வதேச விருதுகள் பல இவர்களைத் தேடிவந்துள்ளன. தேசபந்து, தேசகிர்த்தி என்று தேசிய ரீதியிலும், சமாதானம், கல்வி, வயோதிபர்களுக்கான சேவை விருது என்று சர்வதேச ரீதியிலும் பல விருதுகளை சமூகம் இவர்களுக்கு வழங்கி வாழும்போதே வாழ்த்தி இருக்கின்றது. கிழக்கிலங்கை மண்ணில் பிறந்த நாமும் அவரது மனம் குளிர வாழ்த்தி விழாவெடுக்க முனைந்த போது இக்கட்டுரையை எழுத எனக்கும் ஒரு சந்தர்ப்பத்தை 500 சொற்களுக்குள் எழுதவேண்டுமென வரையறையுடன் தந்து விட்டார்கள். என்னால் இயன்றளவு சுருக்கி இரத்தினச்சுருக்கமாகவே முன்வைத்துள்ளேன். இதற்கு ஏற்பாட்டுக் குழுவினருக்கு எனது நன்றிகளை உரித்தாக்குகின்றேன். இம்மண்ணின் மகிமையை இலங்கையில் மிளிரச்செய்த பண்பும், பாசமும், அன்பும், அரவணைப்பும், ஆளுமையும் ஆழ்ந்த அறிவும் கொண்ட இஸ்லாமிய வரையறையுடன் வாழும் பெண்ணாகவும் அன்பு ஜெஸீமா இஸ்மாயில் அவர்களை அனைவரும் சேர்த்து வாழ்த்துவோம், போற்றுவோம், அவரது சேவைகளை வாழ்வில் அவர் செய்த "சதக்கத்துல் ஜாரியா" க்களை அல்லாஹுத்தஆலா பொருந்தி, அவர்களுக்கு நீடித்த ஆயுளையும், சரீர சுகத்தையும், இகபரஇன்பத்தையும் வழங்கப் பிரார்த்திப்போமாக.

சாமஸ்ரீ தேசகீர்த்தி திருமதி எஸ்.எச்.எம்.எம்.ஏ. காதர்
BEd (Hons), MEd, Dip.in Sch. Mang & SLEAS
முன்னாள் அதிபர், ஸாஹிறா தேசிய பாடசாலை, கல்முனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## “தந்தை மகற்காற்றும் உதவி, அவையத்து முந்தியிருக்கச் செயல்”

அக்கரைப்பற்று கருங்கொடித்தீவு இரண்டாம் குறிச்சியில் 1903ம் ஆண்டு பிரபல்யமான குடும்பமான பக்கீர்லெப்பைப் போடி – பொலிசானை முகம்மதுத்தம்பி வட்டானைக்கும் அஸனார் லெப்பை மரைக்கார் கதீஜா உம்மாவுக்கும் பிறந்த மூன்று குழந்தைகளில், முகம்மத் பாத்தும்மா, மைமூனத்துல் வதவிய்யா ஆகிய இரு பெண் குழந்தைகளுக்குப் பிறகு ஒரேயொரு ஆண் புத்திரராக ஸஹீத் அஹ்மத் பிறந்தார்.

ஸஹீத் அஹ்மத் சிறு பிள்ளையாய் இருக்கும்போதே சுறு சுறுப்பும் துடிதுடிப்பும் எல்லோருடனும் அன்பாகவும் இதமாகவும் பழகும் பண்பும் கொண்டவராக விளங்கினார். கல்வி மீது இவர் கொண்ட ஆர்வம் விஷேடமானது. இவரது இக்குணாதிசயங்களால் கவரப்பட்ட பெற்றோர் இவர் மீது பற்றும் பாசமும் கொண்டு கண்ணெனப் போற்றி வளர்த்து வந்தனர். சகோதரிகளும் அவ்வாறே பற்றும் பாசமும் கொண்டிருந்தனர்.

இவர் கல்வி மீது காட்டி வந்த நாட்டம் காரணமாய் உரிய வயதை விடவும் முன் கூட்டியே கருங்கொடித்தீவு மெதடிஸ்ற் மிசன் பாடசாலையில் சேர்த்தனர். அக்காலக்கணிப்பில் இப்பாடசாலை அக்கரைப்பற்றில் ஓர் உயர்ந்த நிலையில் மதிக்கப்பெற்ற ஒரு மிசன் பாடசாலையாகும். கல்வி மீது இவர் கண்ணும் கருத்துமாய் இருந்த காரணத்தினால், ஆசிரியர்களும் இவர்பால் பேரன்பு கொண்டவர்களாய் இருந்தனர். இவரது தேடல், பதித்தல், வெளிப்படுத்தல் போல் வளவாற்றலினால் கவரப்பட்ட எல்லா ஆசிரியர்களும் இவருக்கான ஓர் உந்து சக்தியாய் விளங்கினர். விஷேடமாக இவருக்கிருந்த அழகியல் ஆர்வங்களும் விளையாட்டுத்துறை ஈடுபாடும் இவரை ஒரு சாதனையாளராக காட்டி நின்றன.

வட்டானையாருக்கு அவரது உத்தியோக ரீதியாக வெள்ளைக்காரத் துரைமாருடன் நல்ல தொடர்புகள் இருந்தன. துரைமாருடைய பேச்சு நடையுடை பாவனைகள் என்பன இளம் ஸஹீத் அஹ்மதை - கவர்ந்திருந்ததன் காரணமாய், ஆங்கில மொழியைக் கற்க வேண்டும் என உந்தப்பட்டார்.

தந்தையாரின் உத்தியோகத் தன்மை தலைமை வட்ட விதானை என்பதாகும். இதனால் இயல்பாகவே வயல் வட்டைகளின் நீர் முகாமைத்துவம் அக்காலக் கடமை ஒழுங்கின்படி, அவரையே சார்ந்திருந்தது. நீர் முகாமைத்துவத்தின் நேரடிக்கரிசனை வெள்ளைக்காரத் துரைகளிலேயே தங்கியிருந்ததனால், வட்டை விதானையாருக்கும் துரைமாருக்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது. அதன் காரணத்தால் அவர்களது ஊக்குவிப்பும் இளம் ஸஹீத் அவர்களின் கல்வியில் மேலும் உந்து சக்தியாக அமைந்தது.

துரைமாரின் சகவாசம் முகம்மதுத் தம்பி வட்டை விதானையாரின் மனத்தில் செலுத்திய தாக்கம், ஆங்கிலக் கல்வியின் அவசியத்தை உணர்த்தியது. இதனால், தனது ஒரே மகன் ஸஹீத் அஹ்மதை இங்கிலீஸ் படிப்புக்காக கல்முனை லீஸ் உயர்தர


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைக்கு அனுப்பி வைத்தார். மட்டக்களப்பில் மெதடிஸ்த மத்திய கல்லூரியும், கல்முனை லீஸ் பாடசாலையும் ஆங்கிலப் படிப்புக்கான கேந்திரங்களாக அக்காலத்தில் விளங்கின. கல்முனை பாடசாலையில் அனுமதி பெறுவதற்கு வட்டை விதானையாருக்கு வெள்ளைக்காரத்துரைமாரின் அனுசரனை இருந்தமை குறிப்பிடத்தக்கது.

தனது 8வது வயதில் மூன்றாம் வகுப்பிற் சேர்ந்த ஸஹீத் அஹ்மத் ஆங்கிலத்தில் ஆர்வத்தோடும் உற்சாகத்தோடும் கற்று, பின்னர் பரீட்சையில் திறமைச்சித்தியுடன் தேறினார். இச்செய்தியை தந்தையார் மூலம் அறிந்த நீர் முகாமைத்துவ வெள்ளைக்காரப் பொறியியலாளர், வட்டை விதானையாரின் ஒப்புதலைப் பெற்று, மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியில் ஆங்கில மூலமான தொடர் கல்வியை மேற்கொள்ளச் சேர்த்தார். மெதடிஸ்த மத்திய கல்லூரியில் தனது கல்வியைத் தொடர்ந்த ஸஹீத் அஹ்மத் அவர்கள் பொதுவாகப்பாடசாலைக் கல்வியிலும் சிறப்பாக ஆங்கில மொழியிலும் தனது ஊக்கப்பாட்டை மிகச் சிறப்பாக வெளிப்படுத்தினார்.

தனது தொடர் கல்வியின் மூன்றாம் கட்டம் மருதானை சாஹிறாக் கல்லூரியில் ஆரம்பித்ததை அவர் எப்போதுமே நினைவு கூர்வார். அதுவே தான் ஒரு நீர் முகாமைத்துவ பொறியியலாளராக வர வேண்டும் என்ற தனது இளமைக்கால இலட்சியத்தை அடைவதற்கான வழியாக இருந்தது எனச் சிலாகித்துக் கூறியுள்ளதாக அறியப்படுகிறது.

ஸஹீத் அஹ்மத் துரை அவர்களின் கல்வி மற்றும் புகழ் அனைத்திற்கும் ஊற்றுக் கண்ணாய் இருந்து வழி சமைத்தது கொழும்பு ஸாஹிறா என்னும் அருங்கலைக் கூடம் ஆகும். அங்கு கல்வி கற்கச் சென்ற தனது இனிய மகனின் பிரிவுத் துயரால் துன்புற்ற அவரைப் பெற்றெடுத்த தாய், தனது மனக் கவலையை போக்கிக் கொள்ள வழி தெரியாது அல்லற்பட்டார். அவ்வேளையில் வேலியில் நின்று கரைந்த காகத்தின் மூலம் தன் அருமந்த மகனின் செய்திளை அறிய விரும்பி பின்வருமாறு தூது விடுத்தார்.

தாய்

1. கொழும்பு நகர் இருந்து
கொளறி வரும் காகங்காள்!
மருதானைப் பள்ளியிலே
என்ர மகன் மகரி தொழக் கண்டையளோ!

2. "முஸ்லிம் தெருவாம்
முத்தும் ஒலமாக்களாம்
பள்ளிக்கு போய் வெருவார்
அதப் பார்த்து வந்து சொல் காகம"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. "பள்ளி கலைஞ்சி
பசி ஆறும் வேளையிலோ
பந்தடிக்கும் எடத்திலையோ அவர
பார்த்து வந்து சொல் காகம்"

காகம்

4. "பென்சில் எடுத்து
பேர் வழியையும் குறிச்சி
கையில் தந்தா - ராத்தா
கண்டோடன நான் மதிப்பன்"

தாய்

5. "ஆளும் வட வடக்க
அகண்ட மொகமும் வடிவும்
பேரும் சயிது அகமது - காகம்
ஒனக்கு பெனிசலண்டா தேவல்ல"

காகம்

6. "எட்டிப் புடிப்பார் எறிஞ்சி காலொடப்பார்
சுட்டு வளத்தாட்டுவார் - ராத்தா
ஓண்ட சோட்டைய நான்
போய்ச் சொன்னனெண்டா"

என்று காகம் விடு தூது மூலம் தன் துயரைக் கலந்துரையாடி ஆறுதல் அடைந்ததும் எவ்வளவு உயர் தத்துவம்! அக்கால கட்டத்தில் அகில இலங்கையிலும் பொறியியலாளர்களாகத் தேறியவர்களுள் முதன்மையானவராக அவரே விளங்கினார். அன்று முதல் இன்று வரை "ஸஹீத் அஹ்மத்துரை" என்றே அழைக்கப்பட்டு வருகிறார். "அல்ஹம்துலில்லாஹ்" அன்னாரது விடாமுயற்சிக்கும் செயற்றிறனுக்கும் இறைவனால் அவருக்கு வழங்கப்பட்ட மாபெரும் அருளே இக்கல்வி – பதவி உயர்வுகளாகும். அவரது சமகாலத்தில் அக்கரைப்பற்றில் இன்னும் பலர் - அவரது உறவினர்கள் படித்துப் பொறியியலாளர்களாகப் பட்டம் தரித்து இருப்பினும், தேசிய ரீதியில் அறியப்பட்ட ஒரு பொறியியற் சாதனையாளராக ஸஹீத் அஹ்மத் அவர்களே திகழ்கிறார் என்பது ஓர் அபூர்வமான வரலாற்றுப் பதிவாகும். தந்தையின் அரவணைப்பு – அவரது செயற்றிறன் என்பவற்றால் முன்னேற்றம் கண்ட ஸஹீத் அஹ்மத் அவர்கள், எவ்விடயத்தையும் மனச்சாய்வு நோக்கி அணுகாமல், யதார்த்த பூர்வமாக அம்சங்களை மாத்திரம் மிகத்தெளிவாகக் கூறி வைக்கும் இயல்பு கொண்டவர். உத்தியோக ரீதியில் தன்னிடம் உதவி கோரி நிற்கும் உறவினர் என்றாலும் அவர்களுக்கு அவர் கூறும் ஒரு வார்த்தை "ஒற்றைக்காலில் நின்று உயர்ந்தவன் நான். ஏன் அது உங்களால் முடியாது?" என்பதே! இது அவர்களுக்குச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகிக்க முடியாத சுடு சொல்லாக இருப்பினும், அது பற்றி அவர் பொருட்படுத்துவதில்லை. "உயர விரும்புபவர் உயர விரும்பினால் பிறர் தயவை நாடக் கூடாது" என்பதே அவரது நோக்கம். எனினும் உள்மனம், அவர்களது உயர்ச்சிக்கு வேண்டுதல் செய்து கொண்டே இருக்கும். அப்படியொரு நல்மனம் அவருக்கே உரியதாகும். இவ்வுண்மையை அறியாத பலர், அவரை வெறுப்பர். அவரது உள்நோக்கம் இதுதான் என இனங்கண்ட பலர் பாராட்டிப் புகழ்வர். இது அவரது விஷேடித்த ஒரு குணாம்சமாகும்.

அவரது முன்மாதிரியான சுபாவத்தை ஒரு கோட்பாடாகக் கொண்டு, இயங்கிய பல உறவினர்கள் தத்தம் பதவிகளில் சிறந்து விளங்கி தத்தமது பதவிகளுக்கு புகழ் சேர்த்தார்கள் - புகழ் சேர்த்தும் வருகிறார்கள் என்பதும் இங்கு சுட்டிக்காட்டத்தக்க ஒன்றாகும்.

ஸஹீத் அஹ்மத் அவர்களது நீர்ப்பாசனத்துறைச் சேவைக்காலத்தில், நாடு தழுவிய ரீதியில் பல சேவைகளைச் செய்துள்ளார். வடமேல் மாகாண – நிக்கவரட்டியக் குளம், கண்டிப் பிரதேசத்தில் 'மொறப்பொல அல' எனும் விசித்திரமான கால்வாய் என்பனவும் இவர் பெயர் கூறுவனவாகும். தனது சொந்த ஊரான அக்கரைப்பற்றில் 1927ம் ஆண்டில் நீத்தைக்குளம் கட்டப்பட்டதும், இலுக்குச்சேனை, சாகாமக்குளங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டதும் புதிய 'சுலுஸ்கள்' வாய்க்கால்கள் அமைக்கப்பட்டதும் நினைத்துப் பார்க்கத்தக்கனவே.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உன்னிச்சை, உறுகாமம் போன்ற நீர்தேக்கங்கள் மற்றும் அம்பாறை மாவட்டத்தில் அம்பாறைக் குளம், கொண்டவட்டுவான் குளம், 1936இல் கல்லரிச்சல் சுலூஸ் போன்றவையும் அவற்றோடிணைந்த கால்வாய்களும் புதிய கட்டுமான அமைப்புக்களாகவும் மாற்றங்கண்டன. குறிப்பாக வட மத்திய மாகாணத்தில் அமைந்துள்ள மின்னேரி, கந்தளாய், கலாவெவ குளங்களிலும் அவற்றோடுள்ள பாய்ச்சல் வடிச்சல் கால்வாய்களிலும் பல்வேறு புனரமைப்பு நிர்மாண வேலைகள் இடம் பெற்றன.

ஸஹீத் அஹ்மத் துரை அவர்களது சேவை தேசிய ரீதியில் பரந்து நிற்கின்ற ஒன்று. அதனால் அவர் தேசியச் சொத்து என்றே எண்ணப்பட வேண்டும். மனித வாழ்வு முடிந்துவிடும்: ஆனால் மனிதன் ஆற்றிய சேவைகள் என்றுமாய் நிலைத்து நிற்பன. அந்த வகையில் ஸஹீத் அஹ்மத் துரை அவர்கள் என்றும் மக்களால் நினைவு கூரப்படுவார்.

ஸஹீத் அஹ்மத் அவர்களது வாரிசுகளான புத்திரிகளும் அவரைப் போலவே தாம் சார்ந்துள்ள கல்வித்துறைகளில் சிறப்புப் பெற்று விளங்குகின்றனர். சர்வதேச நிலையிலும் இலங்கையிலும் முதன்மையான முஸ்லிம்கள் ஐநூறு பேரில் ஒருத்தராகத் தெரிவு செய்யப்பட்ட ஜெஸீமா இஸ்மாயில் அவர்கள் தென்கிழக்குப் பல்பலைக்கழக வேந்தராக அதியுயர் பதவிகளை வகித்தவராவார். மட்டுமன்றி, ஸஹீத் அஹ்மத் அவர்களது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தை தாய் வழிக்குடும்பங்களும் கல்விப் பரம்பரையைச் சேர்ந்தவர்களே. முன்னாள் பொத்துவில் உடையாராகவும், அக்கரைப்பற்று கருங்கொடித்தீவு மத்திய கிராம சபையின் முதலாவது அக்கிராசனராகவும் அமர்ந்த .பை.லெ.போ. ஆதம்லெப்பை அவர்கள் இவரது சிறிய தந்தை ஆவார். மேலும் இவரின் ஒன்றுவிட்ட சகோதரர்கள் முத்து மீராலெப்பை, அகமது முகையதீன், முகம்மது இஸ்மாயில் வாத்தியார் ஆகியோரையும் இவ்விடத்தில் பெருமையோடு நோக்கத்தக்கது. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஐ.எம். அப்துல் மஜீட், அவரது மூத்த சகோதரியின் மகனாவார். தற்போதைய அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லாஹ் அவர்களும் ஸஹீத் அஹ்மத் அவர்களது சிறிய தந்தையின் மகனே. இத்தகு சிறப்புறு பல்லோர் இவரது இரத்த உறவினர்களாவர். மேலும் கிழக்கிலங்கையில் அக்கரைப்பற்றில் கல்வியாளர்களைக் கொண்டதொரு சமூகம் உருப்பெற்றிருப்பதற்கு ஸஹீத் அஹ்மத் அவர்களும் ஒரு காரணம் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை.

சாதனைகள் பலவற்றாலும் உயர்ந்து நின்ற ஸஹீத் அஹ்மத் அவர்கள், தனது மகள் ஜெஸீமா இஸ்மாயில் அவர்களையும் கல்வித்துறையிலும் அவர் சார்ந்திருந்த பதவிகளிலும் தான் உயிர் வாழ்ந்தபோது வழிப்படுத்தினார். ஆசிரியராக, அதிபராக இருந்த ஜெஸீமா இஸ்மாயில் அவ்வப் பதவிகளில் தடம் பதித்த ஒரு பதவி நிலையாளராகத் திகழ்ந்தார். பின்னாட்களில் ஒரு சமூக சேவகியாகவும் குறிப்பாக, சுனாமி அனர்த்தத்தின்போது பாதிக்கப்பட்டோருக்கு உதவிக்கரம் நீட்டிய உத்தமியாகவும் கண்ணியப்படுகின்றார். இத்தகைய செயற்பாடுகளினால் உயர்ந்த நிற்கும் ஜெஸீமா இஸ்மாயில் அவர்கள் உலகக் கணிப்பில் முதற் பெண்மணியாகவும் உயர்ந்து நிற்பதில் வியப்பில்லை. இத்தனைக்கும் அவரது தந்தையே – முழுமுதற் காரணமாக இருந்தார்.

''தந்தை மகற்காற்றும் உதவி, அவையத்து முந்தியிருக்கச் செயல்'' முதுமொழி. அதுபோலவே, மகள் தந்தைக்கு ஆற்றும் உதவி. ''இவரை எத்தகு நோன்பிருந்து இவரது தந்தை பெற்றாரோ'' என மற்றோர் நினைக்க வைப்பதாகும். இங்கு தந்தையும் மகளும் தத்தமது பங்கை மிகக் கச்சிதமாகச் செய்துள்ளனர் என்பதே முடிவாகும்.

இவ்வாறான அம்சங்களெல்லாம் தேசிய – கிழக்கிலங்கை நிலைகளில் ஜெஸீமா இஸ்மாயில் அவர்களின் பெற்றோரின் பழம் பதிகளான அக்கரைப்பற்றிற்கும் சாய்ந்தமருதூருக்கும் புகழ் சேர்ப்பன.

M.B.M. மக்கீன், மருகர்
ஓய்வு பெற்ற அதிபர்,
பிரசித்த நொத்தாரிஸ்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை ஜெஸீமா

தேசபந்து நீ
தேசிய சொத்து நீ....
தேசபந்து நீ
தேசிய சொத்து நீ....

அன்னை திரேசாவின்
அடுத்த வாரிசு நீ
அகிலம் கண்டிட்ட
அரிய பொக்கிஷம் நீ

தேசபந்து நீ
தேசிய சொத்து நீ....

அல்லலுற்ற பெண்களுக்காய்
அயராது உழைத்து நின்றாய்
அதற்காகவே ... உன்னையே
அர்ப்பணித்தாய்!
அதில்.... வெற்றிகள் பல
பெற்று பெண்ணினத்தின்
பெருமை சேர்த்தாய்

தேசபந்து நீ
தேசிய சொத்து நீ....
கல்விக்கோர் அன்னையாய்
கல்லூரி அதிபராய்
கலாச்சார காவலனாய்
நீ ஆற்றிய அரும் பணிகள்
காலத்தால் அழியாத
சிரஞ்சிவிக் காவியமாக
என்றென்றும்.....

தேசபந்து நீ
தேசிய சொத்து நீ....

உள்ளத்தால் உலகம் நீ
உழைப்பினில் இமயம் நீ
கள்ளம் கபடமற்ற
கலங்கரை விளக்கம் நீ
பெண்ணினத்தின் பாதையை
மாற்றிய மாதா நீ

தேசபந்து நீ
தேசிய சொத்து நீ....

கொலம்பஸ் கண்ட
குட்டித் தீவு நீ
கொள்கைகளில்
கால்மாக்ஸ் நீ

தேசபந்து நீ
தேசிய சொத்து நீ....

அன்னை திரேசாவின்
அடுத்த வாரிசு நீ
அகிலம் கண்டிட்ட
அரிய பொக்கிஷம் நீ

அன்னை எம் ஜெஸீமா...
தேசபந்து நீ
தேசிய சொத்து நீ....

டாக்டர் ஏ.எல். பாறூக் (MBBS)
பணிப்பாளர் - IRFAD



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Flood Relief by MWRAF/IRFAD





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Students Awareness Program by IRFAD@Akkaraipattu





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் கண்ட சேவையின் செம்மல் தேசபந்து ஜெஸீமா இஸ்மாயில்

பொதுவாக முஸ்லிம் சமூகத்தில் ஆண்களிலிருந்து தான் சமூக முன்னோடிகள் தோற்றம் பெற்றிருப்பது வரலாறாக இருந்து வந்திருக்கிறது. இதற்குப் புற நடையாக தேசபந்து ஜெஸீமா இஸ்மாயில் அவர்கள் பெண் சமூகத்திலிருந்து தோன்றிய அரிதான சமூக முன்னோடிகளுள் ஒருவராகத் திகழ்கிறார். தேசியரீதியிலும், சர்வதேசரீதியிலும் இவரது மகத்தான ஆக்கப்பணிகள், புத்தாக்கச் சிந்தனைகள் செயற்றிட்டங்களாக அரச சார்பற்ற நிறுவனங்களோடு பங்காற்றுவதற்கு அவருக்கு உறுதுணையாக இருந்தது. எனவே அவரது பின்புலத்தைப் பற்றி தெரிந்து கொள்வது முதலில் அவசியமாகும்.

அம்பாறை மாவட்டத்தில் சாய்ந்தமருது பிரதேசத்தில் காரியப்பர் குடும்பத்தில் பிறந்த இவர் ஊரிலும், கொழும்பிலும் பிரபல பாடசாலைகளில் கல்வி கற்றுள்ளார். அதாவது இவர் கொழும்பிலுள்ள பிரபல மகளிர் பாடசாலையான சென் பிரிஜ்ஜஸ் கொன்வண்டில் ஆரம்ப பழைய மாணவியாவார். இவர் பம்பலப்பிட்டி முஸ்லிம் மகளிர் கல்லூரியில் சுமார் ஒரு தசாப்தத்திற்கு மேலாக பெண் அதிபராக கடமையாற்றி முஸ்லிம் மகளிரை வழிப்படுத்தும் பாரிய அனுபவத்தைப் பெற்றார். மேலும், அமெரிக்கா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளிலுள்ள உயர் கல்வி நிறுவனங்களில் தனது பட்டப்பின் படிப்புகளை மேற்கொண்டார். இவரது சிறப்பம்சங்களை இனங்கண்ட இலங்கை அரசும், அரச சார்பற்ற நிறுவனங்களும் இவரை தம்மோடு இணைத்துப் பணி செய்வதில் பெருமிதமடைந்தன.

பன்முக ஆளுமையும், அனுபவமும் தேசபந்து ஜெஸீமா இஸ்மாயில் அவர்களுக்கு இலங்கைச் சமூகத்தில் மறக்க முடியாத ஓர் அங்கீகாரத்தை வழங்கியது. தேசிய ரீதியில் ஒரு ஆணைக்குழு நியமனம் செய்யப்படும் போதெல்லாம் பெண் சமூகத்தின் சார்பில் ஒருவர் தேவை என்ற நிலை ஏற்படும்போது இவரது பெயரை மாற்றுமத புத்திஜீவிகளும் தயங்காது பிரேரிக்கும் ஓர் உன்னத நிலை இருந்து வருவது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இவரது பல்துறை அனுபவமும், ஆற்றலும் இவரது பிறந்தகமான தாயகத்தில் மேலும் வளர்ச்சியடைய வேண்டும். என்ற நீண்ட நாள் கனவு இவருக்கு இருந்து வந்தது. அதன் வெளிப்பாடே 2001ல் கல்முனை சாய்ந்தமருதுப் பகுதியில் தனது அந்திமகால சேவையை விஸ்தரிக்கும் நோக்கில் அப்போது இயங்கிக் கொண்டிருந்த Peace Foundation என்ற நிறுவனம் அவருக்கும் எனக்குமிடையிலான ஓர் அறிமுகத்தை ஏற்படுத்தியது. Challenge of Change என்ற தொனிப்பொருளில் நாம் இணைந்து அம்பாறை மாவட்டத்தின் முக்கிய பகுதிகளில் சமாதானம், சமூக மேம்பாடு தொடர்பான பல ஆரம்பப் பணிகளை முன்னெடுத்தோம். அதிலோர் அங்கமாக நூறு வருடங்களாக குடிநீர் பிரச்சினையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர் நேர்ககிய சொறிக்கல்முனை, 6ம் கிராமம் போன்றவற்றிற்கு இவரது செயற்றிட்டத்தினூடான மகத்தான சேவை வழங்கப்பட்டமையை அம்மக்கள் இன்றும் நினைவு கூருகின்றனர்.

2004 சுனாமி அனர்த்தத்தின் விளைவு பல பாரிய நிவாரணப் பணிகளையும், மீள் கட்டமைப்புப் பணிகளையும் வேண்டி நின்றது. இறை உதவியால் தேசபந்து ஜெஸீமா இஸ்மாயில் அவர்கள் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தன்னால் முடியுமான உதவிகளை ஒத்தாசைகளை விரைந்து வழங்க அவரது செல்வாக்கு பெரிதும் கைகொடுத்தது. நிவாரணப் பணிகளோடு மட்டும் நில்லாமல் MWRAF நிறுவனத்தினூடாக பெண்கள் நிலையங்களையும் உருவாக்கி வாழ்வாதாரத்தில் கஷ்டப்படும் பல விதவைகள், வறிய பெண்கள் போன்றோரை மீள கட்டியெழுப்புவதில் இன்றும் அயராது பாடுபட்டு வருகின்றார். சமூகப் பணிகளோடு மட்டும் சுருக்கிக் கொள்ளாமல் சமயப் பணிகள் ஊடாக சமாதானம், சகவாழ்வு, இன நல்லுறவு போன்றவற்றை கருப் பொருட்களாகக் கொண்டு அம்பாறை மாவட்ட அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளனம், அம்பாறை மாவட்ட ஜம்இய்யத்துல் உலமா போன்றவற்றை கலந்தாலோசித்து MWRAF நிறுவனம் முன்னெடுக்கும் சமூகங்களுக்கிடையில் நல்லுறவு, உள்ளக சமூக முரண்பாடுகளைதத் தீர்த்தல், அறபுக் கல்லூரிகளுக்கிடையில் புரிந்துணர்வைக் கட்டியெழுப்பும் வகையில் சமாதானக் கல்வி கலைத்திட்டத்தை உருவாக்கல் போன்ற சமய, சமூக மேம்பாட்டு அம்சங்களை தீவிரமாக முன்னெடுக்கும் சிந்தனை இவரது தனிப்பட்ட சிந்தனை என்பதில் கருத்த வேறுபாடு கிடையாது. இச்சிந்தனை நல்ல பல விளைவுகளை தந்ததை நேரில் கண்ட தேசபந்து ஜெஸீமா இஸ்மாயில் அவர்கள் இதனை மேலும் ஜனரஞ்சகப்படுத்தும் நோக்கில் இந்து, கிறிஸ்தவ, பௌத்தம் போன்ற ஏனைய சமயக் குழுக்கள் சம்மேளனங்களாக இயங்கி அது சர்வ சமய சம்மேளனமாக பரிமாணம் அடைய பல்வேறு ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வழங்கியுள்ளார்.

இவரது மேற்படி சிந்தனைகள் MWRAF நிறுவனத்தின் பல்வேறு வெளியீடுகளாக எழுத்துருவில் வெளிவந்து கொண்டிருக்கின்றன. பொதுவாக மேற்படி சேவைகளை அரசியல் அதிகாரம் கொண்டவர்களால் மட்டுமே செய்யமுடியும் என்ற ஒரு பாரம்பரியம் சமூகத்தில் இருந்து வருகின்றது. ஆனால் ஆச்சரியம் என்னவென்றால் அரசியல் அதிகாரம் படைத்த பலர் இத்தகைய பணிகளை செய்யமுடியாமல் முடக்கப்பட்டிருக்கின்ற சூழ்நிலையில் சுயாதீனமாக இயங்கும் இப்பெண்மணியால் மேற்படி சமய, சமூக சேவைகளை தைரியத்தோடு உலமாக்களோடும், சிவில் சமூக அமைப்புக்களோடும், சமய நிறுவனங்களோடும் இணைந்து செய்ய முடியுமாக இருப்பது இறைவன் அன்னாருக்கு வழங்கிய ஒரு விஷேட அருட்கொடை என்றால் அது மிகையாகாது. முன்னாள், இந்நாள் ஜனாதிபதிகளுடன் நெருக்கமான உறவை கொண்டிருக்கும் இவர் தேசிய மட்டத்தில் பிரபல்யம் அடைந்ததனால் **"தேசபந்து"** என்று 1989ம் ஆண்டு கௌரவ விருது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கி பாராட்டப்பட்டமை நமது சமூக அரசியல்வாதிகளுக்கு கிடைக்காத ஒரு பேறை அவர் பெற்றிருக்கிறார் என்பதை நியாயமாக சிந்திக்கும் எவரும் ஏற்றுக் கொள்வர்.

பங்களாதேஷ், பாகிஸ்தான், இந்தோனேஸியா, மலேசியா, அமெரிக்கா போன்ற பல்வேறு நாடுகளில் நடைபெற்ற மாநாடுகளில் இவர் சமர்ப்பித்த ஆய்வுக் கட்டுரைகள் சர்வதேச ஆய்வாளர்களின் கவனத்தை ஈர்த்துள்ளன. இதனால் மேற்படி மாநாடுகளுக்கு எதிர்காலத்தில் பங்குபற்றுபவர்களைத் தேர்வு செய்து சிபாரிசு செய்யும் உரிமை தேசபந்து ஜெஸீமா இஸ்மாயில் அவர்களுக்கு வழங்கப்பட்டிருப்பது சர்வதேச ரீதியில் இப்பெண்மணி கீர்த்திமிக்கவர் என்பதை நிரூபித்துக் கொண்டிருக்கின்றது.

MWRAF நிறுவனத்தின் அனுசரணையுடன் NESCOD எனப்படும் நீடித்து நிலைத்து நிற்கும் சமூக அபிவிருத்திக்கான நிறுவனம் அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் பல்வேறு வாழ்வாதாரத்திட்டங்களையும், சுய தொழில் முயற்சிகளையும் முன்னெடுக்கும் இவரது சேவை முழுக்கிழக்கிலும் வறுமையுற்ற நிலை நீங்கி வசந்தம் நிலவ வேண்டும் என்ற அவரது நீண்ட நாள் கனவை நனவாக்கும். இந்த வகையில் கிழக்கு மக்களின் பாரம்பரிய தொழில் முயற்சிகள் நவீனத்துவம் பெறவேண்டுமெனவும் சிற்றுண்டி வகைகளை தொழில் முயற்சியினூடாக தயாரித்து ஏனைய பிரதேசங்களுக்கு விற்பனை பொருளாக அனுப்பி அதன் மூலம் கிழக்கு வாழ் மக்கள் சுபீட்சம் அடைய வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் இருந்து வருகின்றது. இதனை செயலுருப்படுத்துவதில் MWRAF அதன் ஆளணியினர், அனுசரணையாளர்கள் இணைந்து பணியாற்றிக் கொண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

குடும்ப வாழ்வியல் என்பதன் பொருள் எங்கும், எப்பொழுதும், எவ்வேளையும், எதிலும் புரிந்துணர்வுடனும், அன்புடனுமான வாழ்க்கை என்பதுதான். அதற்கு இலங்கையில் முன்னுதாரண புருஷர்களாக இவரது வாழ்க்கையை நான் கண்டேன். விருந்தோம்பல், உதவி செய்தல் என்பது இவருக்கும், இவரது கணவருக்கும் இரத்தத்தில் ஊறிப்போன ஒரு விடயமாக இருப்பதையும் இங்கு குறிப்பிடுவது பொருத்தமானது.

இத்தகைய இவரது சமய, சமூக, தேச பணிகள் தொடர்ந்து இனமத பேதமின்றி சகல சமூக மக்களுக்கும் கிட்டுவதற்கு இறைவன் அருள்பாலிப்பதோடு அன்னாருக்கு நீண்ட ஆயுள் கிடைக்க இக்கட்டத்தில் நாம் அனைவரும் பிராத்திப்போமாக. நன்றி

எம்.எஸ். ஜலீல்
பிராந்திய இணைப்பாளர்
MWRAF - கல்முனை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை ஜெஸீமா இஸ்மாயில்; இலங்கை முஸ்லிம் மாதர்களின் முகவரி

உலகில் தோன்றும் யாவரும் உத்தமராவதில்லை. பலர் பிறக்கின்றனர். தாமும் சிறக்காமல், பிறரையும் சிறப்பிக்காமல் தாமும் தமது பாடும் என வாழ்ந்து விட்டு அழிந்து விடுகின்றனர். இன்னும் சிலர், தாம் உயர்ந்து பிறர் உயர்வுக்கு உதவாமல் உதிர்ந்து விடுகின்றனர். மற்றும் சிலர் இயன்ற மட்டும் ஆண்டனுபவித்து கொடிகட்டிப்பறந்து விட்டு, எரிச்சலால் மற்றவர் எழுச்சியை ஏற்றுக்கொள்ளாமல், இயன்ற மட்டும் உண்மைக்கும் நேர்மைக்கும் உயர்ச்சிக்கும் எழுச்சிக்கும் குறுக்கே நின்று விட்டு கொடியவனாய் மாண்டுவிடுகின்றனர். அரிதாக சிலர் உள்ளனர்.அவர்கள் தாம் கண்ட இன்பம் வையகம் பெற வேண்டும் என்று விரும்புபவர்கள். உண்மையில் இவர்கள்தான் உத்தமர்கள்.

ஜோர்தானில் இயங்கும் இஸ்லாமிய வியூகக் கற்கைகளுக்கான அரச மையம் (The Royal Islamic Strategic Studies Center) 2010ஆம் ஆண்டுக்கான உலகின் மிகவும் செல்வாக்குள்ள 500 முஸ்லிம்களுள் ஒருவராக அன்னை ஜெஸீமா இஸ்மாயீல் அவர்களை தெரிவு செய்துள்ளது அனைவராலும் அங்கிகரிக்கப்பட வேண்டியதும், வரவேற்கப்பட வேண்டியதுமான ஓர் அம்சமேயாகும்.

இந்த வகையில் அன்னை ஜெஸீமா இஸ்மாயீல் அவர்கள், தனது அறிவு, அனுபவம், ஆற்றல், ஆளுமை என்பவற்றை மூலதனமாகக்கொண்டு இலங்கையில் வாழும் முஸ்லிம்களுக்கும் ஏனைய சமூகத்தவருக்கும் தன்னாலியன்ற சேவைகளைச் செய்து வருகின்றமை நாடறிந்த விடயமாகும். தான் பெற்ற உயர்வு மற்றவரும் பெறவேண்டுமென்பதற்காக எதிர்பார்ப்புகள் எதுவுமின்றி உற்சாகத்துடனும் உறுதியுடனும் உணர்வு பூர்வமாக ஓய்வில்லாமல் உழைத்து வரும் இவ் அன்னை உண்மையில் ஓர் உத்தமர்தான்.

இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் பல ஆண் தலைவர்கள் தோற்றம் பெற்று, தாம் சார்ந்த சமூகத்துக்கும் தேசத்துக்கும் குறிப்பிடத்தக்களவு சேவை செய்துள்ளனர். அவர்கள் இறந்து பல வருடங்கள் ஆகிவிட்டாலும் அவர்களின் நாமங்கள் இன்னும் உச்சரிக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. அறிஞர் சித்திலெப்பை, T.B.ஜாயா, A.M.A. அஸீஸ், பதியுத்தீன் மஹ்மூட், M.H.M.அஷ்ரப்

முதலானோர் இவர்களில் குறிப்பிடத்தக்க சிலராவர்.

உண்மையில் பெண்கள் சமூக சேவையிலும், சீர்திருத்தப்பணிகளிலும் ஈடுபாடு காட்டி தம் முயற்சிகளில் உறுதியாகவிருந்து வெற்றி காண்பது என்பது எமது சமூக அமைப்பைப் பொறுத்த வரையில் மிகவும் சிக்கல் வாய்ந்த ஒரு கடினமான விடயமாகும். என்றாலும் கூட அன்னை ஜெஸீமா இஸ்மாயில் அவர்கள் உறங்கிக்கிடந்த பெண் சமூகத்தை விழிப்பூட்டி எழுப்பி அவர்களுக்குள் உறங்கிக்கிடக்கும் அறிவையும் ஆற்றலையும் ஆர்வத்தையும் வெளிப்படுத்தி, சமூகப்புனரமைப்பில் அவர்களுக்கும் பாரிய பணிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல உள்ளன என்பதை பறைசாற்றி நிருபிக்கும் பணியில் பல்வேறு சவால்களுக்கும் மத்தியில் சுமார் 35 வருடங்களைச் செலவு செய்து வெற்றி கண்டுள்ளார்கள். இந்த வகையில் இலங்கையில், ஆட்சி அதிகாரங்களில்லாமலேயே சமூகத்துக்கும் தேசத்துக்கும் காத்திரமான பங்களிப்புச் செய்த ஒரு முஸ்லிம் பெண் தலைவியாக அன்னை அவர்களை அடையாளப்படுத்த முடியுமென உறுதியாக நான் நம்புகின்றேன்.

1990ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் வடபுல முஸ்லிம்கள் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளால் வெளியேற்றப்பட்டிருந்தனர். எங்கு வாழ்வது, எதிர்காலம் என்ன என பல்வேறு வினாக்களுடன் ஏங்கிப்போயிருந்த அவர்களில் ஒரு பகுதி அகதிகளுக்கு பேருவளையில் ஒரு வீட்டுத்திட்டத்தை நிறுவி, பள்ளிவாசல், குர்ஆன் மத்ரசா என்பவற்றையும் ஏற்படுத்திக்கொடுத்து ஆனந்தமடைந்தவர் அன்னை ஜெஸீமா இஸ்மாயில் அவர்கள்.

2004 டிசம்பரில் இலங்கையின் கரையோரப் பகுதிகளில் சுனாமி ஏற்படுத்திய வடுக்களை யாரும் எளிதில் மறந்து விட மாட்டார்கள். அத்தருணத்தில் விரைந்து நின்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு குறிப்பாக கிழக்கு மாகாண மக்களுக்கு கைகொடுத்து உதவுவதில் அன்னை ஜெஸீமா இஸ்மாயீல் அவர்கள் எடுத்துக்கொண்ட பங்கு அளப்பெரியது. இங்கு குறிப்பிட்டு கூறத்தக்க முக்கியமானதொரு அம்சம் யாதெனில், சுனாமியைத் தொடர்ந்து உள்நாட்டு,வெளிநாட்டு அரச சார்பற்ற அமைப்புக்கள் பல தொண்டுப் பணியில் ஈடுபட்ட போதும் அவை தமது பணிகளை மட்டுப்படுத்தப்பட்ட காலப்பகுதிக்குள் முடித்துக்கொண்டன. ஆனால் அன்னை அவர்கள், தாம் ஸ்தாபித்து வழிநடாத்தும் சமூக நல அமைப்புக்கள் மூலம் பாதிக்கப்பட்ட விதவைகள் வாழ்வதற்கு வேண்டிய வாழ்வாதார மற்றும் சுய தொழில் உதவிகளையும், வழிகாட்டல்களையும் இற்றை வரை வழங்கி வருவது பிரார்த்திக்கவும், வாழ்த்தப்படவும் வேண்டிய விடயமாகும்.

உண்மையில் அன்னை ஜெஸீமா இஸ்மாயீல் அவர்கள், பெண்களை அவர்கள் கொண்டுள்ள மௌட்டீக, மூட நம்பிக்கைகள், பழக்க வழக்கங்களிலிருந்து விடுபடச் செய்யவும், அவர்களை வலுவூட்டி அவர்களின் உரிமைகளை ஷரீஆவின் எல்லைக்குள் வென்றெடுத்து உத்தரவாதப்படுத்தவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் பெண்கள் மாநாடு (Sri lanka Muslim Women's Conference) முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி (Muslim Women's Research and Action Forum) முதலான பெண்கள் அமைப்புக்களை உருவாக்கிய போதும், அவ்வமைப்புக்களை வெறுமனே பெண்கள் நலனை மேம்படுத்தும் குறுகிய வட்டத்துக்குள் அவர்கள் வரையறுத்துக் கொள்ளவில்லை. மாறாக சமூகத்தின் மற்றும் பல தேவைகளுக்கும் அவற்றைப் பயன்படுத்தினார்கள்.

இந்த வகையில் உலமாக்களை உருப்படியானவர்களாகவும், உதாரண புரிஷர்களாகவும், ஆற்றலுள்ள சமூகத்தலைவர்களாகவும் ஆக்கி அழகு பார்க்க விரும்பிய அன்னை அவர்கள், அதற்கான பல்வேறு செயற்றிட்டங்களை வடிவமைத்து செயற்படுத்தி வருகின்றார்கள். இதன் நிமித்தம் மௌலவி, மௌலவியாக்கள் அழைக்கப்பட்டு கொழும்பிலும், கல்முனையிலும் பல கருத்தரங்குகள், செயலமர்வுகள் நடைபெற்றுள்ளன. உலமாக்களினால் வெள்ளி தினங்களில் நிகழ்த்தப்படும் குத்பா பேருரைகளின் தரத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேம்படுத்தும் பொருட்டு பல்வேறு செயலமர்வுகள் நடத்தப்பட்டதுடன், மாதிரி குத்பா பேருரைத் தொகுப்பொன்றும் வெளியிடப்பட்டமை நினைவிற் கொள்ளத்தக்கதாகும்.

இதேவேளை கிழக்கில் தோன்றி மேற்கில் வாழும் அன்னை ஜெஸீமா இஸ்மாயீல் அறிவாலும், ஆற்றலாலும் அரும் பெரும் குணங்களாலும், அயராத உழைப்பாலும், அர்ப்பணிப்பாலும், அக புற அழகாலும்,ஆளுமையாலும்,ஆரவாரமில்லாத அடுக்கடுக்கான சேவைகளாலும், எடுப்பில்லாத எளிமையாலும் எல்லா தரப்பார் மனதையும் ஈர்த்துக்கொண்ட ஓர் உத்தமி என்பதால் எம்மனம் ஆனந்தத்தால் குளிர்மையடைகின்றது.

இன்று உலகளாவிய ரீதியில் இஸ்லாத்துக்கும், முஸ்லிம்களுக்கும் எதிராக திட்டமிடப்பட்ட பாரிய சிந்தனை ரீதியான யுத்தமொன்று முடுக்கிவிடப்பட்டுள்ளது. தெய்வீக ரீதியாக குர்ஆன், ஹதீஸ்கள் மூலம் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் சில கருத்துச் சுதந்திரம் என்ற போர்வையில் அடி நுனி தெரியாமால் அபத்தமாக விமர்சிக்கப்படுகின்றன. இத்தகு நவீன சவால்களை எதிர்கொள்ள வேண்டிய பாரிய பொறுப்பு சமுதாயத்தின் புத்திஜீவிகளையும் கல்விமான்களையும் அவர்கள் பங்கெடுத்துள்ள அமைப்புக்களையும் சார்ந்துள்ளது.

அன்னை ஜெஸீமா இஸ்மாயீல் அவர்கள், இஸ்லாத்துக்கெதிரான சிந்தனா ரீதியான யுத்தத்தை எதிர் கொள்வதில் முஸ்லிம் தளபதிகளில் ஒருவராக இருந்து, தான் எழுதிய பல நூல்கள் மூலமாகவும், தான் தலைமை தாங்கும் அமைப்புக்களின் அனுசரணையுடன் இஸ்லாமிய அறிவு ஞானத்தில் நிபுணத்துவமுள்ள வளவாளர்களின் ஆக்கங்களைக்கொண்டும் அவ்வப்போது ஆணித்தரமானதும் காத்திரமானதுமான இஸ்லாத்தின் நீதி நியாயமான தீட்சன்னியமான கருத்துக்களை நிரூபிப்பதில் சாதனை படைத்து வருகிறார்.

இதே வேளை, இஸ்லாம் கூறும் இன சௌஜன்யம் சக வாழ்வு பற்றிய கோட்பாட்டினை நிரூபிக்கும் வகையிலான செயற்றிட்டங்களை முன்வைத்து கிழக்கிலும் மேற்கிலும் சமூகங்களை மனிதாபிமான ரீதியாக ஒன்றிணைக்கும் பணியில் வெற்றிகண்டு வருகிறார்கள். அம்பாறை மாவட்டத்தில் இந்து, பௌத்த, கிறிஸ்தவ சமயங்களுக்கான மாவட்ட சம்மேளனங்களை நிறுவிய பெருமை அன்னை அவர்களையே சாரும்.

அன்னையின் தூய சிந்தனைகளும், எதிர்பார்ப்புகளும், கனவுகளும் வெற்றி பெற பிரார்த்திப்பதுடன், புதிய கனவுகள் யாவும் நனவாகும் வரை அவரது ஆயுள் நீடிக்கவும் எமது ஆசி உண்டாகட்டும்.

அஷ்ஷெய்க் A.L. நாஸிர் கனி - ஹாமி MA
விரிவுரையாளர்
அட்டாளைச்சேனை தேசியக் கல்விக் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நானறிந்த திருமதி. ஜெஸிமா இஸ்மாயில்

கிட்டத்தட்ட இரண்டு தசாப்தங்களுக்குப் பின்னோக்கி செல்கிறேன். அப்போது நான் எனது தந்தையின் ஊரான அக்கரைப்பற்றில் கல்வி கற்றுக்கொண்டிருந்தேன். ஐந்தாம் வகுப்புப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தபோது, கொழும்பு முஸ்லிம் மகளிர் கல்லூரிக்குச் செல்வதா? இல்லையா? என்ற இரண்டு மனநிலையில் நானும் எனது பெற்றோரும் இருந்த போதுதான், திருமதி. ஜெஸிமா இஸ்மாயிலை பெயரளவில் எனக்கு அறிமுகமாகியது. அப்போது அவர் கொழும்பு முஸ்லிம் மகளிர் கல்லூரியின் அதிபராக இருந்தார். எனது தந்தையின் பெரியப்பாவின் மகள் அவர். எனது தந்தை அவரை பேபி ராத்தா…என்றுதான் குறிப்பிடுவார். அது 1983 இனக் கலவரத்திற்குச் சற்றுப் பிற்பட்ட காலமாகையினால் தலைநகரிற்கு கல்வி கற்கச் செல்லும் எண்ணம் கைவிடப்பட்டது. இருந்த போதிலும் திருமதி. ஜெஸிமா இஸ்மாயிலினைப் பற்றி எங்கள் வீட்டில் கலந்துரையாடல் தொடர்ந்தது.

எனது தந்தைக்கு அவர் சகோதரி. அதனால் எனக்கு அவர் மாமி. எனது தந்தையின் தாய்க்கு, எனது மாமியின் தகப்பன் முறை மச்சான். இவ்வாறு அவர்களது கடந்த காலக் கதைகளை எனக்கு எனது தந்தை சொல்லியுள்ளார். இவை நடைபெற்றது 1980களில்.

சற்று முன்னோக்கிச் செல்கிறேன். 1990களில் எனது தந்தை மாலைதீவில் பணியாற்றிக் கொண்டிருக்கும்போது நான் அவருக்கு ஆங்கிலத்தில் கடிதம் எழுதுவேன். அவர் அதிலுள்ள பிழைகளைத் திருத்தி தான் எனக்கு எழுதும் பதிலுடன் அதையும் சேர்த்து அனுப்புவார். அப்போது எனது தந்தை தனது கடந்த காலத்தை நினைவு கூருவார். தான் மட்டக்களப்பு மெதடிஸ்த் மத்திய கல்லூரியில் கற்கும் காலத்தில் தனது பேபி ராத்தா கொழும்பு புனித பிரிஜட்ஸ் கல்லூரியில் கற்றுக் கொண்டிருந்ததையும். தான் அவருக்கு ஆங்கிலத்தில் கடிதம் எழுத, அவர் தனக்கு அதைத் திருத்தி தனது பதிலுடன் அனுப்புவதையும் எனது தந்தை பல தடைவ நினைவு கூர்ந்து எனக்கு கூறியுள்ளார்.

காலம் கடந்தது; எனது பாடசாலை உயர் கல்வியும் நிறைவுபெற்றது. 1994ஆம் ஆண்டில் நாங்கள் குடும்ப சகிதம் தலைநகரிற்குக் குடியேறிவிட்டோம். 1996ஆம் ஆண்டு கிழக்கில் இனக்கலவரம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. கிழக்குப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடக் கற்கை நெறியை இனக்கலவரத்தின் காரணமாக தொடரமுடியாமல் மூன்றே மூன்று மாதத்தில் முடித்துக்கொண்டு வாழ்க்கையின் அடுத்த கட்டம் என்ன? என சிந்தித்துக் கொண்டிருக்கும்போதுதான், முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியுடனான எனது தொடர்பு ஆரம்பமானது. அவர்களது கருத்தரங்குகள் சிலவற்றில் பங்குப்பற்றியுள்ளேன். அப்போது நான் திருமதி. ஜெஸிமா இஸ்மாயில் அவர்களைப் பலதடவை கண்டிருக்கின்றேன். ஆனால் நான் யாரென்பது அவருக்குத் தெரியாது. நான் அதைக் காட்டிக்கொள்ளவுமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடங்கள் சில கடந்தன. நான் சட்டக்கல்லூரி புகுமுகப் பரீட்சையில் சித்தியடைந்து, சட்டக்கல்லூரியினுள் நுழைந்து சட்டத்தரணியாகச் சத்தியப்பிரமாணமும் செய்து கொண்டேன்.

2003ஆம் ஆண்டில் மீண்டும் முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியுடனான எனது தொடர்பு ஆரம்பமானது. அவர்களது, முஸ்லிம் தனியாள் சட்டம் சம்பந்தப்பட்ட வழக்குகளை முன்னெடுத்துச்செல்ல என்னை வேண்டியிருந்தார்கள். அப்போது மீண்டும் திருமதி. ஜெஸிமா இஸ்மாயிலுடனான பரீட்சயம் ஆரம்பமானது. அப்போதுதான் அவருக்கு நான் யாரென்பது தெரியும். அவரை நான் முதலில் சந்தித்தபோதும் கூட எனது வாப்பம்மாவினதும், அவரது வாப்பாவினதும் கதைகளைச் சொல்லி என்னுடன் சிரித்தார்.

எது எவ்வாறாயினும் 2005ஆம் ஆண்டிலிருந்துதான் எனக்கும் அவருக்குமிடையிலான தொடர்பு வலுவடையத் தொடங்கியது.

கூட்டங்கள் எதற்கும் செல்கின்றபோது சட்டத்தரணி என்று என்னை அறிமுகம் செய்வதுடன் மாத்திரமன்றி தனது உறவுமுறையையும் சொல்லித்தான் மற்றவர்களுக்கு அறிமுகம் செய்வார்.

நான் அவரிடம் கண்டவை பல. கற்றுக்கொண்டவை சில. கற்றுக்கொள்ள வேண்டுமென்று எண்ணுபவை மிகுதி.

எந்த ஒரு விடயத்திலும் அவரது சிந்தனை நேரானதாகத்தான் இருக்கும். எதையும் எதிர்மறையாக எடுத்துக்கொள்ள மாட்டார். வாழ்க்கையில் அவர் இந்தளவு உயர்வதற்கு காரணம் அவரது நேரிய பார்வையும், சீரிய சிந்தனையுமாகத்தான் இருக்க வேண்டுமென நான் அடிக்கடி நினைப்பதுண்டு.

அவரது தலைமைத்துவத் திறமையில் எப்போதுமே எனக்கு ஒரு அலாதிப்பிரமிப்பு. எந்த இடத்திலும், எந்தப் பிரச்சினையையும், எந்தச் சவாலையும் தைரியமாகவும், நிதானமாகவும் முகம் கொடுப்பார். 2008ஆம் ஆண்டில் எமது அலுவலகத்தில், பிரதானமாக என்னால் ஒழுங்கு செய்யப்பட்ட ஒரு பாரிய கூட்டம் நடைபெற்றது. சமூகப் பிரமுகர்கள் நூற்றுக்கும் மேற்பட்டோர் பங்குபற்றிய அக்கூட்டத்தில் பாரிய சவால்களை சந்திக்க வேண்டியேற்பட்ட போதிலும், திருமதி. ஜெஸிமா இஸ்மாயில் அதனை சாதுர்யமாகச் சமாளித்தார். இத்தகைய சந்தர்ப்பங்களில் அவர் பக்கத்திலிருப்பது உண்மையிலேயே ஒரு பாரிய தைரியத்தை ஏற்படுத்தும். இவ்வாறு சவால்களை சந்திக்கவும், அதனைச் சாதுர்யமாக முறியடிக்கவும் அவருக்குள்ள திறமையை நான் கட்டாயம் கற்றுக்கொள்ள வேண்டுமென எப்போதுமே நினைப்பேன்.

எத்தனை வேலைப்பளுவுடன் இருந்தாலும் சரி, எத்தனை அவசரமாக இருந்தாலும் சரி, நாம் ஒரு விடயத்துடன் அவரிடம் செல்லும் போது, எமது பேச்சுக்கு நிதானமாக செவிகொடுத்து, எமக்குக் கூறவேண்டியதைக் கூறி, எமக்குச் செய்யவேண்டியதைச் செய்து விட்டுதான் செல்வார். எமக்கும் எமது தேவைகளுக்கும் அவர் முக்கியத்துவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுப்பதனால்தான் அவரின் முக்கியத்துவம் மக்களுக்குத் தேவைப்படுகின்றது என்ற தத்துவத்தை அவரது நடவடிக்கையிலிருந்து உணரக்கூடியதாகவுள்ளது. தனக்கு எவ்வளவு அவசரமாக இருந்தாலும் சரி, எமது விடயத்துக்கு முன்னுரிமை வழங்கிவிட்டுத்தான் செல்வார்.

என்னைப்பொறுத்தவரையில் எனது ஒவ்வொரு விடயத்திலும் என்னை அவதானிப்பவராகவே அவர் இருப்பார். ஆனால் எனக்கு அது பின்னர்தான் புரியும். எனது உடை, நடை, பாவனை, நான் செய்யும் பணிகள், எனது சுபாவம் என எல்லாவற்றிலும் அவர் கருத்தாக இருப்பார்.

ஒரு சுவாரஷ்யமான விடயம். தொழில் ரீதியில் நான் சில விடயங்களைப் பற்றி அவரிடம் கேட்பேன். அவர் எனக்குத் தரும் கருத்தில், நான் எண்ணிய கருத்தைவிட முரண்பாடு காணப்பட்டால் எனது அசௌகர்யத்தை அவரிடம் முகத்திற்கு நேரே சொல்ல மாட்டேன். அடுத்த நாள் அலுவலகம் வராமல் நின்றுவிடுவேன். இப்படி இரண்டு...மூன்றுதடவை நடந்துள்ளது. இவ்வாறு ஒரு நாள் வீட்டில் இருக்கும்போது, அவர் எனக்குத் தொலைபேசியில் தொடர்புகொண்டு "என்ன ... மீட்டிங்கிற்கு டேட் தரவில்லையென்றா..... இன்று ஒபீஸுக்கு வரவில்லை...?" என்று சிரித்துக்கொண்டு கேட்க எனக்கும் சிரிப்பு வந்துவிட்டது. அவர் எந்தளவுக்கு என்னை அவதானிக்கின்றார் என்பதை உணரும்போதுதான் அவரது அனுபவ முதிர்வும், எனது முதிரா அனுபவமும் விளங்கியது. அதன் பின்னர்தான் உணர்ந்தேன். இவரிடம் எதையும் மனம்விட்டுக் கதைக்கலாமென்று. இந்தச் சம்பவத்தின் பின்னர் இவ்வாறு நான் அலுவலகம் வராமல் வீட்டில் நிற்பதில்லை. எதையும் அவரிடம் கதைத்து முடித்துக்கொள்வேன்.

நான் எனது சட்ட முதுமாணிக் கற்கையை ஆரம்பிக்க வேண்டுமென்பதில் அவருக்கிருக்கும் அவா அளவுக்கு எனக்கே இருக்கின்றதா என்பது கேள்விக்குறியே. நான் எனது உயர் கல்வியைத் தொடர்வேனா... இல்லையா...என்பது எனக்கே தெரியாது. ஆனால் ஒரு வேளை நான் என்றாவது எனது உயர் கல்வியைக் கற்று அதில் முன்னேறுவேனாகில் அந்த முன்னேற்றத்தில் முக்கிய பங்களிப்பு அவருக்குண்டு.

எதையும் அவரிடம் மனம்விட்டுக் கதைக்கலாம். எந்தப் பிரச்சினையையும் அவரிடம் முறையிடலாம். எல்லாவற்றிக்கும் ஒரு சிறந்த தீர்ப்பை எமக்குத் தருவார். அல்லது சிறந்த தீர்ப்பைப் பெறுவதற்கான ஆலோசனையையாவது எமக்குச் சொல்வார்.

சிலவேளைகளில் என்ன பலவேளைகளில் நான் வீட்டில் சமைக்காமல் வருவதுண்டு. வேலைப்பளுக்களும் உதவியின்மையும், தலைநகர் நெருக்கடி வாழ்க்கை முறையும் சில வேளைகளில் வீட்டுச் சமையலைப் பிற்போட்டுவிடும். இருந்தபோதிலும் எந்தத் தயக்கமுமின்றி அலுவலகத்திற்கு வருவேன். அங்கே ஆன்டியிடம் (திருமதி. ஜெஸிமா இஸ்மாயில்.... மாமி) சாப்பாடு இருக்குமென்ற நம்பிக்கைதான் அத்தயக்கமின்மைக்குக் காரணம். "ஆன்ரி! இன்று உங்களுடன்தான் சாப்பிடுவேன்" என எவ்விதக் கூச்சமும், தயக்கமுமின்றி அவரிடம் சொல்லலாம். நான் சாப்பாட்டிற்கு வருவதற்குப் பிந்தினாலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கென்று ஒரு பீங்கானில் எடுத்து வைத்திருப்பார். அப்போது மறைந்து போன எனது தாய்தான் என் கண்முன்னால் வந்து நிற்பார்.

நோன்புப் பெருநாளுக்கு உடுப்பு வாங்கும்போது ஆன்ரியிடமிருந்து இன்னொரு உடுப்பு எப்படியாவது கிடைக்குமென்ற நம்பிக்கையுடன்தான் அடுத்த உடுப்பைத் தெரிவு செய்வேன். இவர் வெளிநாடுகள் எங்கேயும் சென்றுவிட்டால்.. வெளியே சென்ற தாய் தகப்பன், எமக்கு என்ன வாங்கிக் கொண்டுவருவார்கள் என எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் சிறுபிள்ளைபோல் அவரை எதிர்பார்த்துக் கொண்டிருப்பது வழக்கம். அந்த எதிர்ப்பார்ப்பு எப்போதுமே வீண் போகாது.
அவர் கட்டாயம் எதாவது கொண்டுவருவார்.

இவ்வாறு பார்க்கின்ற போது திருமதி. ஜெஸிமா இஸ்மாயில்.. என்னைப் பொறுத்தவரையில் ஒரு நண்பியாக அவதானித்தால் அவர் ஒரு நல்ல நண்பி. ஒரு ஆசிரியராக நோக்கும் போது, அவர் ஒரு நல்லாசிரியர். ஒரு வழிகாட்டியாக வேண்டுமெனில், அவர் ஒரு சிறந்த வழிகாட்டி. ஒரு தலைவராக நோக்கும் போது அவர் ஒரு சிறந்த தலைவி. எல்லாவற்றிக்கும் மேலாக அவரை ஒரு தாயாக எண்ணினால் அவர் ஒரு தாய்.

இவ்வளவும் சொல்லிக்கொண்டுபோகும் போது மனதில் ஒரு சின்ன உதைப்பு. இவர் அடிக்கடி சொல்வார் என்னை தன்னைப்போல் உருவாக வேண்டுமென்பதாக. அவரைப் போல உருவாகுவதென்பது என்னைப் பொறுத்தவரையில் சற்றுக் கடினமான விடயம். ஓரளவு உருவாகலாம். ஆனால் முற்று முழுதாக, என்பது கேள்விக்குறி. இருந்தாலும் அவரிடம் நேரே சொல்லிக்கொள்ள ஏதோ ஒரு தயக்கம். இருந்த போதிலும், அவரது திறமைகள், அவரது சுபாவங்கள், தன்மைகள், குணாம்சங்கள் என்பன தனித்துவமானவை. அல்லாஹ் அவருக்கு அளித்த நன்கொடைகள். அவர் நீடுழி காலம் வாழவேண்டும்.

ஸபானா குல் பேகம்
சட்டத்தரணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாய்ந்தமருதூர் பெற்ற தவப்புதல்வி

சாய்ந்தமருதூர் பெற்ற தவப்புதல்வி
எங்கள் ஜெஸீமா
சாந்தம் தவழும் முகம்
தனக்கென வாழாத கொள்கை
பிறருக்கு உதவுவதை
பிரியமான தொண்டாக
என்றும் புரிந்து நிற்பார்
இதயம் கனிந்து நிற்பார்

♣♣♣

கரும்பிலும் இனிய வார்த்தை
கனிவான சொல் வளங்கள்
கடின உழைப்பதனால்
கல்வியில் உயர்ந்த நிலை
நேர்மை, மன உறுதி
நினைவாற்றல் என்பதெல்லாம்
ஆண்டவன் அவர்க்களித்த
அருள் கொடையாம் அணிகலன்கள்

♣♣♣

பாளின் சகீட் அகமட்
பண்பு நிறை தம்பதிகள்
பெற்றெடுத்த மும்மணிகள்
நேசம். தங்கம். பேபி
நேசம் சாஹிறா என்றும்
தங்கம் லத்தீபா என்றும்
பேபி ஜெஸீமா என்றும்
விளங்கி வழங்கி வந்தார்.

♣♣♣

அக்கரைப்பற்றூர்
தந்தையது தாயகமாம்
சாய்ந்தமருதூர்
தாயினது பிறந்தகமாம்
இரு பெரிய குடும்பங்கள்
இணைந்ததனால் வந்தவர்தான்
எங்கள் தலைவி
இனிய ஜெஸீமா இஸ்மாயில்

♣♣♣

கல்முனை கார்மேலில் (Carmel Convent)
கருவுற்ற அவர்கல்வி
சென் பிரிஜட் கொண்வெண்டில்
சீர் பெற்று வளர்வுற்று
பேராதனை பல்கலையில்
மனித நேயப் பட்டம் பெற்று
கனேடியப் பல்கலையில்
முதுமானிப் பட்டம் பெற்றார்

♣♣♣

தேவி பாலிகாவின்
சிறந்த நல்லாசானாகி
சிட்னி பல்கலையில்
(ப.பி) டிப்ளோமா பட்டம் பெற்று.
முஸ்லிம் மகளிரில் (MLC - Co)
முதல் தர அதிபராகி, அதன்
உயர்ச்சிக்கு உழைத்ததனால்
உத்தமியார் வெற்றி கண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☘☘☘

மதியுடை பெருமகனார் புறொபஸர்.
மஹ்றூப் இஸ்மாயிலவர்
காதலித்து கரம்பிடித்தார்
கன்னி மகள் ஜெஸீமாவை
பெற்றெடுத்த மும்மணிகள்
ஜிஹான், நௌஸாத், நாதியா
பெயர் வழங்க இன்று
வாழுகிறார் குடும்பமாக.

☘☘☘

பெருமகள் ஜெஸீமாவின்
பெரும் சேவை அத்தனைக்கும்
பெரும் துணையாய் நிற்பவர்தான்
பெருமகன் மஹ்றூப் இஸ்மாயில்,
மதிப்புக்குரிய எங்கள்
மஹ்றூப் இஸ்மாயில் துரை
மனிதருள் மாணிக்கம்
மனிதப்புனிதர் அவர்

☘☘☘

முஸ்லீம் பெண்களிலே ஜெஸீமா
முத்தாகவே திகழ்ந்தார்
முன்னணியில் பல்துறையில்
முதல் தடத்தை அவர் பதித்தார்
சாதி, மதம், பாராது
சகலருக்கும் சேவை செய்தார்
சேவையின் சிகரமானார்
தென்கிழக்கின் வேந்தரானார்.

☘☘☘

தேடிவந்த பதவிகளை
திறமையினால் அலங்கரித்தார்
முஸ்லீம் பெண்களிலே
முதல் தேசபந்து ஆனார்
சேவையில் உயர்ந்து நின்று
தேசிய விருது பெற்றார்
சர்வதேச மட்டத்தில்
தன் தடத்தை அவர் பதித்தார்
உலக முஸ்லீம் அரங்கினிலே
உயர்ந்த ஐநூறுவரில்
இவரும் தெரிவாகி
எமக்குப் புகழ் சேர்த்தார்

☘☘☘

சர்வமத ஒன்றியமும்
சிரேஸ்ட பிரசைகள் சபையும்
மஹ்மூத் மகளிரும்
றப் அமைப்பும் பெருமக்களும்
ஒன்றிணைந்து,
வாழ்கவென வாழ்த்துகிறோம்
வாழ்க! நீடூழி
வளர்க அவர் நற்சேவை!

அல்-ஹாஜ் எம்.எம்.காசிம்
ஓய்வுபெற்ற ஆசிரியர்
சாய்ந்தமருது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும்பான்மை - சிறுபான்மை என்று நாட்டு மக்களைப் பிரிப்பது தவறு

சுடரொளி - 31.08.2007

## தென்கிழக்குப் பல்கலை வேந்தர் வலியுறுத்து




அம்பாறை மாவட்ட அனைத்து பள்ளிவாயில்கள் சம்மேளனம், முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி நடவடிக்கை மையத்துடன் இணைந்து கொழும்பு சாஹிரா கல்லூரியில் நடத்திய இமாம்களுக்கான ஒரு நாள் பயிற்சி செயலமர்வில் சம்மேளனத் தலைவர் மௌலவி எம்.எல்.எம். [illegible] தலைமை உரையாற்றுவதையும், பிரதம அதிதியாக கலந்து கொண்ட இலங்கையிலுள்ள பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் சாஹிப் ஏ. [illegible] உரையாற்றுவதையும் கலந்து கொண்ட இமாம்களில் ஒரு பகுதியினரையும் விசேடமாக செயலமர்வில் பங்குபற்றியவர்களாக கலந்து கொண்ட தென்கிழக்கு பல்கலைக்கழக வேந்தரும், முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி நடவடிக்கை மையத்தின் தலைவியுமான ஜெமீலா இஸ்மாயிலையும் அவரது குழுவினரையும் படத்தில் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு மதத்தலைவர்களே தலைமை வகிக்கவேண்டும்

## தென்கிழக்கு பல்கலைக்கழக வேந்தர் ஜெஸீமா இஸ்மாயில்

வீரகேசரி 29-09-2007 காரைதீவு.

"அரசியல் ஒரு போதும் மக்களுக்கான தலைமைத்துவத்தைத் தராது. மாறாக மதத்தலைவர்களே சாதாரணமக்களின் தலைவர்களாக சிறந்த தலைமைத்துவத்தை வழங்க முடியும். சிவில் சமூகம் ஒன்றிணைந்து மதத்தலைவர்களூடாக நாட்டுப் பிரச்சினையைத் தீர்க்க முன்வரவேண்டும்."

இவ்வாறு தென்கிழக்குப் பல்கலைக்கழக வேந்தரும், முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியின் தலைவியுமான தேசபந்து ஜெஸீமா இஸ்மாயில் வேண்டுகோள் விடுத்தார்.

அம்பாறை மாவட்ட அனைத்துப்பள்ளிவாசல்கள் சம்மேளனம் கல்முனை கிறீன்பீல்டில் சனியன்று நடத்திய 'சமூகங்களுக்கிடையிலான ஒற்றுமையை வலுவூட்டல்' எனும் கருத்தரங்கில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

சம்மேளன உபதலைவரும் [illegible] இணைப்பாளருமான டாக்டர் எம்.ஐ.எம். ஜெமீல் தலைமையில் இடம்பெற்ற இக்கருத்தரங்கில் தேசபந்து ஜெஸீமா இஸ்மாயில் மேலும் கூறியதாவது:-

நாட்டின் நிலைமையைப்பார்க்கின்ற போது மனதில் வேதனையாக இருக்கிறது. ஒரு பக்கம் மனித உரிமை சிதைந்து கொண்டு போகிறது. மறுபக்கம் அதி அராஜகம் தலைவிரித்தாடுகிறது.

வன்முறை, குழப்பங்கள், முரண்பாடுகள் நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது.

இப்பிரச்சினைகளுக்க [illegible] யல் ஒரு நாளு[illegible] போர [illegible]

தேடல்கள், பல கோணங்களிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றபோதிலும் அவை அர்த்தபுஷ்டியாக இல்லை. எனவே, சிவில் சமூகங்கள் ஒன்றிணைந்து மதத்தலைவர்கள் முன்னிலையில் சமாதானத்திற்கான பாதையை அடைய முயற்சிக்க வேண்டும்.

மதங்கள் முதலில் ஒன்றை [illegible] ந்து பின்னர்தான் [illegible] சிந்திக்கும் [illegible]

## சமய பெரியார்களும் சிவில் சமூகத்தின் பிரதிநிதிகளும் ஒன்றிணைய வேண்டும்

### தேசபந்து ஜெஸீமா இஸ்மாயில் அழைப்பு

தினகரன் (நமது நிருபர்) 7/10/2007

அரசியல் தலைமைகளினால் ஒரு போதும் சமாதானத்தைக் கொண்டு வர முடியாது. அரசியல்வாதிகளின் நடவடிக்கைகளினாலேயே இன முரண்பாடுகள் அதிகரித்து வருகின்றன. [illegible] சமயப் பெரியார்கள் [illegible] அது தான் [illegible] அடைந்திடுமா? என அனைத்தினும் கேள்வி. சமாதானத்திற்கான [illegible]

அங்கு தேசபந்து ஜெஸீமா இஸ்மாயில் மேலும் கூறியதாவது. [illegible] இந்நாட்டில் அனைத்து இன மக்களும் நிம்மதியாக வாழக்கூடிய சூழல் ஏற்படுத்தப்பட வேண்டும். நாட்டின் பொருளாதார வளர்ச்சியும் மக்களின் வாழ்வாதாரமும் சமாதானம் மிக அவசியம் [illegible] டைய வேண்டுமாயின் சமாதானம் [illegible] மாணிக்கம், [illegible] பழனி, வண பிதா கோமஸ், [illegible], ரண்முத்துகல்ஹேம் ஆகியோர் மத உரைகள் ஆற்றினர். சம்மேளனச் செயலாளர் ஐ.எம். இப்றாஹிம் தொகுப்புரை வழங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கில் அரும்பிய மலர்

ஆயிரமாயிரம் அரிவையர் பிறந்தாலும்
அகிலத்தில் ஏற்றமாய் வாழ்தலரிது

கிழக்கில் மாண்புடன் வாழ்ந்த காரியப்பர் பரம்பரையில்
கீர்த்தி மிகு சாய்ந்தமருது உன் பிறப்பிடம் ஜெஸீமா

அரசியல் தோட்டத்தில் பூத்த மலர் எனினும்
அரசியலன்றியே ஆற்றலாம் சேவை என்பதை நிரூபித்தீர்

பெண்கள் ஆராய்ச்சி முன்னணி என்ற பெயரால்
பெண்ணினம் ஏற்றம் பெறவே உழைத்தீர்

சோதனைகள் பல வந்த போதும், சோர்ந்து விடாமல்
சாதனைகள் பல புரிந்தீர் மகிழ்வுடனே.

பூவையர் தம் வாழ்வில் பூரிப்படைய ஆற்றிய
பணிகள் ஏராளம்... ஏராளம்....

கிழக்கின் கீர்த்தி மிகு குடும்பத்தில் உதித்து
மேற்கில் ஆற்றிய அதிபர் பணியால்
உயர்ந்தோர் பலர்

சாதனைகள் படைக்க சாத்தியமாய் ஆனது எதனால்?
மும் மொழியும் உன் நாவில் சரளமாய் தவழ்கிறதே
இது உன் சேவைக்கு உறுதுணையாய் அமைந்ததோ

பூவுலகில் ஐந்து நூறில் ஒருவராய் தெரிவானது
உன் சேவைக்குக் கிடைத்த மகுடமே

மூவினமும் முரண்படக்கூடாதே என ஏங்கினீர்
அதனால் உதித்ததே சர்வ மத சம்மேளனம்

தேசபந்து என்னும் பட்டம் பெற்றது
தேசிய ரீதியில் ஆற்றிய சேவைக்கன்றோ

தென்கிழக்கு பல்கலை வேந்தராய் வந்த
முதல் முஸ்லிம் பெண்மணியானாய்

கல்விக்கு ஆற்றிய சேவைக்கு இறைவன்
கொடுத்த பரிசுகள் பல,

இறைவன் கொடுத்த வரமாய் நீடுழி
வாழ வாழ்த்துக்கள்

M.I. அப்துல் ஜப்பார்
ஓய்வு நிலை பிரதேசக் கல்விப் பணிப்பாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Acknowledgement

We extend our grateful thanks to

- ★ H.E.President Mahinda Rajapakse, Religious dignitaries, Political leaders, District/Div. Secretaries and VC/SEUSL for their Messages
- ★ All those who have contributed articles, poems etc
- ★ All those who have assisted the felicitation committee financially
- ★ Principal, Staff and Students of M.L.C. for the arrangements of the Felicitation Ceremony
- ★ ECO MWRAF - Coordinator and Staff for their assistance in he felicitation ceremony
- ★ Members of IRFAD and CSCS for their support
- ★ Mr.M.A.M.M. Himayathullah for his untiring services in type setting and coordinating.
- ★ AJ Prints, Dehiwala for their courtesy and good work.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக அரங்கில் பிரசித்தமான ஐந்நூறு முஸ்லிம்களில் ஒருவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள தேசபந்து ஜெசீமா இஸ்மாயில் அவர்களைப் பாராட்டுவதில் நாங்களும் இணைந்து கொள்கின்றோம்

**Fazal Stores**

(Dealers in Fancy Goods, Toys & Imitation Jewelry)

No: 97/3, Private Bus Stand, Kalmunai

Tel: 067-2229297,

0777374950,0777561671,0672222589(Res)

Email:mjmkalith@yahoo.com

உலகில் செல்வாக்குமிக்க ஐந்நூறு முஸ்லிம்களில் ஒருவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள தேசபந்து ஜெசீமா இஸ்மாயில் அவர்களுக்கு எமது பாராட்டுக்கள்

**RIFAS MOTORS**

**(Authorized Dealer for Brown & Co)**

**255,Rifas Complex,Main Street, Sainthamaruthu-09**

**Tel: 067-2229151, 0773264515, 0672220495(Res)**

**Fax: 067-2223205**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Best Wishes from

*Samasiri Deshamanya*

AlHaj. A.A. Saleem (Trustee)

Proprietor:- **USHAM & COMPANY**

Main Street,Sainthamaruthu

Tel: 067 2222688, 2221328,

Mob: 0777491925, 0713057999

(Dealers in T.V, LCD, Radio, Refrigerator, Washing machines, Gas cookers, Rice cookers, Oven, Blender, Plastic items, Mattresses, A.C, Water cooler, Fans, Steel furniture etc)

**Await a unique banking experience!**

*We will be Sri Lanka's first licensed commercial bank to conduct the entirety of banking operations in complete harmony with the principles of Islamic Finance. We will offer our customers a unique banking experience.*

- Current Accounts
- Savings Accounts
- Kids Savings Accounts
- Term Investment Accounts
- Home Financing
- Leasing
- SME Banking Services
- Corporate Banking Services
- Trade Services
- Treasury Services

**Amãna Bank**

Amãna Bank, 480 Galle Road, Colombo 3, Sri Lanka. T: +94 11 2564090 F: +94 11 2574419



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்**

மருதூரால் உலகில் ஐந்து நூறில் ஒருவராய்
வந்ததை பெருமையாய் கொள்கின்றோம்
இவ்வூருக்கும் நாட்டுக்கும் பெருமை

*வாழ்த்துகிறேன், வாழ்த்துகிறேன், வாழ்த்துகிறேன்*
*எங்கள் நிறுவனம் சார்பாக*

**அல்ஹாஜ் A.C.M.இக்பால்**

# USHA SHOW ROOM

***258,Main Street, Sainthamaruthu-09***

Tel:2229092,2221204,5670142

Mob: 0773 546 092,

ஆடவர் உலகில் புதியதோர் சாம்ராஜ்யம்

**Mohamed**

*Specialist in Men's wear*

இந்தியா, சிங்கப்பூர், மலேசியா, இந்தோனேசியா,
சீனா, ஹொங்கொங், டுபாய் போன்ற நாடுகளில் இருந்து
ஆடவர்களுக்கான சேட், Tசேட், ஜீன்ஸ்கள், சாரம், பெல்ட்,
மொடல் கெப் வகைகள் அத்துடன் திருமண ஆடைகள் மற்றும் வாசனைத் திரவியங்கள்

அனைத்தையும் நேரடியாக இறக்குமதி செய்து
வாடிக்கையாளர்களுக்கு நியாய விலையில் வழங்குவதில் பெருமிதம் கொள்கின்றனர்.

MAIN STREET, MARUTHAMUNAI. TEL : 0672225367, 0713134143





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments from*

Eng.Z.M.Hairu,
Chairman,

**Hairu Engineering Consultant Holdings**

Gamini Bldg,16,Dharmashoka Mawatha,Kandy
Tel: 081 2202360

*Congratulations & Best Wishes*

*from*

**Mrs. Farookiya Jiffry**
Colombo-06



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே

உலக அரங்கில் பிரசித்தமான ஐந்நூறு முஸ்லிம்களில் ஒருவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள மனித நேயப் பண்புகள் அடங்கிய தேசபந்து ஜெசீமா இஸ்மாயில் அவர்களைப் பாராட்டுவதில் நாங்களும் இணைந்து கொள்கின்றோம்




Al-Haj. S.H.Nazeer B.Sc. (B.Admn.Sp.)

Proprietor of

# Nazeer Marketing Service

(Dealers in Hardware, Electrical and Electronic items)

No: 556A, Main Street, Sainthamaruthu -07

Tel:0777575355, 0673676077

Email:nzeer_nms@hotmail.com Fax:067-2220323

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org